உ

# திருவள்ளுவர்.

இது,

ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L.,

எழுதியது.

செந்தமிழ்ப்பிரசுரம்—௫௧.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

1929

உ

# திருவள்ளுவர்.

இது,

ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L.,

எழுதியது.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

மதுரைத்தமிழ்ச்சங்கம்
THE MADURA TAMIL SANGAM

செந்தமிழ்ப்பிரசுரம்—ருக.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

1929

ம

# மதிப்புரை.

## I

[மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி
ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதியது.]

சென்னைச்சர்வகலாசாலையார் விரும்பியபடி மதுரை ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியாரவர்கள் M.A., B.L., 1929-ஆம்௵ மார்ச்சுமீ 11 ஆம்௳ பச்சையப்பன்கலாசாலையில் "திருவள்ளுவர்" என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசியதைக்கேட்டு இன்புற்றவர்களுள் யானுமொருவன்.

குழறுபடையாகவும் முன்னுக்குப்பின் முரணாகவும் பண்டைக்கால வாலாற்றிற்கு மாறாகவும் இக்காலத்தில் வழங்கும் திருவள்ளுவருடைய சரித்திரப்பகுதிகளுள், கொள்ளத்தக்கவையிவை, தள்ளத்தக்கவையிவை யென்பதையும், அவருடைய கல்விப்பெருமையையும், பழையபுலவர்கள் அவர்திறத்தும் அவர் நூலினிடத்தும் கொண்டிருந்த மதிப்பையும், அவர் இன்னநிலையில் இருந்தாரென்பதையும் தடை விடைகளை நிகழ்த்தித் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டிக் கேட்போருடைய மனத்தில் நன்றாகப் பதியும்படி பேசியது பாரதியாரவர்களுக்குள்ள தமிழார்வத்தையும், தமிழ்நூற்பயிற்சியையும், சொல்லாற்றலையும், ஞாபகசக்தியையும் புலப்படுத்திக் கேட்டோர்மனத்தைக் குளிர்வித்தது. வியப்பையும் விளைவித்தது.

இவ்வரியபிரசங்கம், கேளார்க்கும் பயன்படும்படி பதிப்பிக்கப் பெற்றுப் புத்தகஉருவமாக வெளிவந்ததைக்கண்டு மகிழ்ந்தேன். இப் புத்தகம் தமிழ்ப்பண்டிதர்களுக்கும் அவர்களில் ஆராய்ச்சியாளர்களுக்கும் ஒரு புதுவிருந்தாக இருக்குமென்றெண்ணுகிறேன்.

திருவேட்டீசுரன்பேட்டை,
சென்னை.
21—5—1929.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

## II

[மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பத்திராதிபரும்,
கலாசாலைத் தலைமையுபாத்தியாயருமான
ஸ்ரீ உ. வே. திரு. நாராயணையங்காரவர்கள் எழுதியது.]

மதுரை ஹைக்கோர்ட்டுவக்கில் ஸ்ரீமத்: எஸ். சோமசுந்தரபாரதியார் M.A., B.L., அவர்கள் திருவள்ளுவரதுவரலாறுபற்றி மதுரையில் மதுரைத்தமிழ்ச்சங்கம், வாலிபகிறிஸ்தவசங்கம் இவற்றின் ஆதரவில் ஒருபந்நியாசம் செய்தார்கள். அப்பொழுது அவ்வரலாற்றுள் வழங்கப்பட்டுவரும் சில பிறழ்ச்சிகளைப் பலசான்றுகளாலும் யுக்திகளாலும் ஒருவாறு மாற்றிக்காட்டினார்கள். அதனைப் பலரும் அறியும்படி செந்தமிழில் வெளியிடவேண்டுமென்று நான் விரும்பியதற்கிசைந்து பழைய தமிழ்நூல்கள்பலவற்றினின்றும் பலசான்றுகள்காட்டி ஓராராய்ச்சியுரையாயெழுதி வெளியிட்டார்கள். பின்பு சென்னைச்சருவகலாசாலையார் விருப்பத்திற்கிசைந்து இவ்வாராய்ச்சிக்கு வேண்டியன மேலும் சில கூட்டிப் பெருக்கிப் புதுக்கிச் சென்னையில் பாரதியாரவர்களே பிரசங்கித்தார்கள். அப்பொழுது பல சிறந்தபண்டிதர்களால் நன்குமதிக்கப்பெற்றது பற்றியும் புத்தகமாகப் பதிப்பிக்கவேண்டுமென்று பலர் விரும்பியது பற்றியும் மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் இது பதிக்கப்பெற்றிருக்கிறது.

இதனுள், திருவள்ளுவர் கடைச்சங்ககாலத்துக்கு மிகவும்முற்பட்டவர் என்பதும், அவர் புலைவருப்பினரல்லரென்பதும், பிறவும் பழைய தமிழ்நூல்கள்பலவற்றினின்றும் போதுமான பலகுறிப்புக்கள்காட்டி நிறுவப்பட்டுள்ளன.

இதற்குமாறாகவழங்குங் கதை, வள்ளுவர் என்ற பெயர் ஒன்றேபற்றி அவர்தகைமையறியாதாரொருவன் மயங்கிக்கட்டிய கட்டுக்கதையென்பதும், அது யாதோராதாரவுமில்லாத வெறும்பேச்சென்பதும், அதுவும் திருவள்ளுவமாலை பிறப்பதற்குமுன்னமே வழங்கத்தொடங்கிவிட்டதென்பதும் அத்திருவள்ளுவமாலையின்கணுள்ள மாமூலனார்பாடலின் சொற்குறிப்புக்களால் உய்த்துணரக்கிடக்கின்றன. ஆயினும், அவற்றையெல்லாம் நன்குபுலப்படுமாறு வெளிப்படையாக்கிக்காட்டியது இவ்வாராய்ச்சியே,

இவ்வாராய்ச்சியால் பாரதியாரவர்களுடைய தமிழ் நூலுணர்ச்சியும், மதிநுட்பமும், ஆராய்ச்சிவன்மையும், புலமைவாய்ந்த தமிழ்நடையமைப்பும் புலப்படுகின்றன.

பாரதியாரவர்கள் இன்னும் பல ஆராய்ச்சிகளியற்றித் தமிழுலகுக்குபகரித்துத் தமிழாராய்ச்சிக்கு ஒரு தக்கோராய்விளங்குவரென்றெண்ணுகின்றேன்.

மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை,
28—5—1929.

திரு. நாராயணையங்கார்.

### III

[மகிபாலன்பட்டி, தமிழ் - ஆரியப்புலவரான திருவாளர்
பண்டிதமணி-மு. கதிரேசச்செட்டியாரவர்கள் எழுதியது.]

அருங்கலைவிநோதரும் உயர்தரநீதிமன்றத்து வழக்கறிஞரும் ஆகிய திருவாளர் ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L., அவர்கள் திருவள்ளுவரைப்பற்றி அரிதின் ஆராய்ந்து இயற்றிய சொற்பொழிவைப் படித்துப்பார்த்தேன். இவர்களுக்கு இயற்கையின் அமைந்துள்ள செந்தமிழ் உயர்சிறப்பு நடைநலன் இச்சொற்பொழிவினும் செவ்வன் அமைந்துள தென்பது கூறவேண்டியதின்று. இச்சொற்பொழிவின் ஒவ்வொரு பகுதியும் நுண்மாணுழைபுலமுடையார் சுவைத்துணர்ந் தின்புறத்தக்க விருந்தாக மிளிர்கின்றது.

இதன்கண் இவர்கள் வள்ளுவரைப் புலைக்குடிப்பிறப்பினரல்லர்—அரசியல்வினையில் உள்படுகருமத்தலைவராய் முதுக்குடிப்பிறந்துயர்ந்தவர் எனக் கண்டதும், சகரமுதன்மொழி திருக்குறளி லரிதென ஆய்ந்து அதனாற் காலப்பழமை தேறியதும், கல்லாதார்க்குக் கல்விநலந்துய்த்த சங்கத்தாரை எடுத்துக்காட்டிய முனிவருரையைப்பற்றிய ஆராய்ச்சியும், ‘உப்பக்கநோக்கி’ என்னும் அரும்பொருட்செய்புட்கு உவமையும் பொருளையும் இயைத்துக்காட்டிய உணர்நலனும் பிறவும் மனத்தை வியப்புறச் செய்து மகிழ்விக்கின்றன.

இவர்கள் சங்கப்புலவர்பாடல்கொலோவென ஐயுற்ற வள்ளுவமாலைச் செய்யுளொன்றுகொண்டு இப்பொய்யில்புலவர்வாழ்க்கைப்பேற்றுக்குக் கூடலை யிடனாக்குதல்கூடுங்கொலோவெனின், அறவே பிரமாண மில்லாதகூற்றைநோக்க இஃது எத்துணைவலியுடைத்தென உற்றுநோக்கு வார்க்கு அமையுமென்க. சங்கம்வளர்ந்த தனிப்பெருங்கூடலில் மங்கல வாழ்க்கை வளம்பெறத்தோன்றிய வள்ளுவப்பெரியாரை அவர்மாண்பு நிலையோர்ந்து வலிந்து மயிலைக்கு ஈர்த்துச்சென்றார்வலிநிலையளந்து, இகல்பொருதழித்து, மீண்டும் நம் பாடல்சால்கூடலிற் பண்புறக்கூட்டிய பாரதியார்பேருதவி தமிழகத்தாருள்ளத் தொளிரும் ஒரு பெரு மணியாகும்.

வள்ளுவர்வரலாற்று மலர்வனத்தில், அவர் வாழ்க்கைச்செய்திக ளாகிய வனப்புமிக்க நறுமணங்கமழும் மெல்லிய அரும்புமலர்கள்நிறைந்த பயன்றரு சிறுபூஞ்செடிகளை, அகப்புறச்சான்றுகள் யாதுமின்றிச் செவித் தொடர்வழக்காய் நீண்ட பலகாலமாக வழங்கிவந்த - புலைக்குடிப்பிறப்பு— மயிலைவாழ்வு — ஏலேலசிங்கர்தொடர்பு — கூடற்சங்கவென்றி — கால அணிமை—ஆரியமுதனூல்பற்றி அறம்பாடியது - என்னும் இன்னோ ரன்ன பொய்படுசெய்திகளாம் பயனில்பெருமரங்கள் பண்டையுருத் தெரியவொட்டாது வேரூன்றி யடர்ந்திருத்தலைக் கண்ட நம் பாரதியார், செப்பமுற ஆராய்ந்து, தெளிவுரைகூறும் நாக்கோடரியால் அவ் வடர் பெருமரங்களை வெட்டி வேரறக்களைந்து, காண்போர் கண்ணும் மனமும் களிப்புறும்வண்ணம் அப் பண்டைப் பயன்றருமலர்வனத்தைப்புதுக்கிப் பழமுதுநூற் குறிப்புக்களாகிய தெண்ணீர்பாய்ச்சிச் செழிப்புறவளர்க்க முற்பட்டனரென்பதே என் கருத்துரையாகும்.

இன்னும் இவர்கள் பொருளொடுபொருந்தும் உரைபல வுலகுக் கீந்து நிலைபெறும் உயர்புகழ்பெறுகவென்பது என் உளத்தியல் வாழ்த் தாகும்.

மகிபாலன்பட்டி,<br>9—6—29.

மு. கதிரேசன்.

# முன்னுரை.

தமிழகத்தில் தலைநின்ற தமிழ்ச்சான்றோர்பலரையும்பற்றி அவர் குடிப்பழிப்பான பல ஆபாசக்கதைகள் சமீபகாலங்களில் எழலாயின. திருவள்ளுவர், நக்கீரர், கம்பர் முதலிய பெரியாரையெல்லாம் எளிதில் வேளாப் பார்ப்பன ஆண்டிகளுக்கு இழிகுலப்பெண்டிரீன்ற மக்களெனச் சிலர் கதைக்கின்றனர். எனினும், இக்கதைப்பவர் துணிவைவிட, அக் கதைகளைச் சிறிதும் தடையின்றியேற்கும் தமிழ்மக்களின் தற்காலநிலை வியப்பும் விசனமும் விளைக்கின்றது. வள்ளுவரைப்பற்றிய கதைகளை ஆன்ற நூற்சான்றுகொண்டு ஒருவாறாக நான் சிறிது ஊன்றி விசாரிக்க லானேன். என் ஆராய்ச்சியிற் கிடைத்த சில கருத்துக்களை முதலிற் சில நண்பர் வேண்டுதலின்படி பண்டிதர்சிலர்முன்பு திருச்சிராப்பள்ளி யில் 1925-ம் வருடக்கடைசியில் வெளியிட்டேன். அப்போது அவர்கள் என் கருத்துக்களை ஆதரித்து ஊக்கினார்கள்.

பிறகு, மதுரைத்தமிழ்ச்சங்கம், வாலிபகிறிஸ்தவசங்கம் என்பவற் றின் துணையாதரவில் மதுரை ஐக்கியகிறிஸ்தவகலாசாலையில் சில உபந்நி யாசங்கள் நிகழ்த்தப்பெற்றன. அவற்றுள் ஒன்று 1926-ம் ௵ ஜன வரிமீ 25௳ ரேவரண்டு H. A. பாப்லிதுரையவர்களின் தலைமைக்கீழ்க் கூடிய பெருங்கூட்டத்தில் திருவள்ளுவர்சரிதத்தைப்பற்றி நான் செய்ய நேர்ந்தது. அங்கு அப்போது விஜயம்செய்திருந்த சேதுஸமஸ்தான மகாபண்டிதரான பிரும்மஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்காரவர்கள், சோமேசர் முதுமொழிவெண்பா ஒன்றைச் சுட்டி, அதனால் வள்ளுவர் கீழ்க்குலத்தவர் என்னுங் கதை வலிபெறநிற்பதைக் குறிப் பிட்டார்கள். என்னிடமிருந்து தக்கசமாதானங்கொண்டு என்னை ஊக்கும் அவர்களின் நன்னோக்கத்துக்கு நான் பண்டிதரவர்களுக்கு நன்றிகூறி, அக்கதை அப்பாட்டால் எவ்வித ஆதாரவையும் பெறுமை யையும் அப்பாட்டு அக்கதையின் உண்மையை ஆராய்ந்து அங்கீகரிக் கும் நோக்குடையதன்றென்பதையும் எடுத்துக்காட்டினேன். பிறகு பண்டிதரவர்களும் பிறரும் வேறு ஆட்சேபம் ஒன்றுமின்றி என் கருத் துக்களை ஆமோதித்தார்கள். அன்று அங்கு அவ்வுபந்நியாசத்தைக் கேட்டிருந்த தமிழ்ச்சங்கத்துத் தலைமைக்கணக்காயர் பிரும்மஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்கள் விரும்பியபடி பின் அக்கருத்துக்களைச் செந் தமிழில் 24-ம் தொகுதி 9, 10 பகுதிகளில் எழுதி வெளியிட்டேன்.

சமீபத்தில் சென்னைச் சர்வகலாசாலையார் வேண்டிக்கொண்டபடி இவ்வாண்டில் சென்ற மார்ச்சுமீ 11, 12 தேதிகளில் நான் பச்சையப்பன் கல்லூரியிற்செய்த இரண்டு உபந்நியாசங்களில் முதலது திருவள்ளுவரைப்பற்றியதாகும். அப்போது சர்வகலாசாலைப்பிரதிநிதிகள் யாருமே வாராவிட்டாலும், மஹாமஹோபாத்தியாய பிரும்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள், பண்டிதர் ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள், சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திரு. வையாபுரிப்பிள்ளையவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கக்காரியதரிசி திருவாளர் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் போன்ற தகவுடைப் பெரியார் பலர் கேட்டு உடன்பாடுகூறி என்னை ஊக்கினார்கள். உபந்நியாசமுடிவில் மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள் என்னை ஆசீர்வதித்து அன்போடு ஆதரவுகூறினார்கள்.

நான் மதுரைக்குத் திரும்பிவந்தபிறகு தம்மிடம் மஹாமஹோபாத்தியாயரவர்கள் திருவள்ளுவரைப்பற்றிய என் ஆராய்ச்சியைப் பாராட்டியதோடு அதனைப் புத்தகமாக வெளியிடுவது நலமென்று அபிப்பிராயப்பட்டதாகவும் சங்கக்காரியதரிசி ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் என்னிடம் தெரிவித்ததோடு, தம் அதைத் தமிழ்ச்சங்கப்பிரசுரமாகவே வெளியிடவிரும்புவதாயும் சொன்னார்கள். அவர்கள் விரும்பியாங்கு இது செந்தமிழ்ப்பிரசுரமாக வெளிவருகிறது.

நான் எதிர்பாராதவண்ணம் என்னை ஊக்கிய பெரியார்களுக்கும், என்கட்டுரைக்கு மதிப்புரை தந்துதவிய புலவர்கட்கும், இக்கட்டுரை வெளியீட்டை விரும்பி மேற்கொண்ட தமிழ்ச்சங்கக்காரியதரிசியவர்கட்கும் நான் என்றும் கடப்பாடுடையேன்.

என் கருத்துக்கள் துணிந்தமுடிபுகளென்று கொள்ளவேண்டா. வழங்கும் பல கற்பனைக்கதைகளையும் நம்பி அவற்றை அப்படியே பரப்பிவரும் குணத்தைச் சிறிது மறந்து, "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் — மெய்ப்பொருள் காண்பது அறிவு" எனும் பொய்யில்புலவர் பொருளுரையைக் கையாளத் தமிழ்மாணுக்கரை என்கட்டுரை எனைத்தளவும் தூண்டுதற்கு உதவுமாயின், அனைத்தளவு என் சிறுமுயற்சிக்குப் போதியபயன்பெற்றவனாவேன்.

மதுரை,
25—5—1929.

ச. சோமசுந்தரபாரதி.

# *திருவள்ளுவர்.

சங்கப்புலவர்சரிதங்களுள் ஒன்றுமே சரியாகத் தெரிந்தபாடில்லை. நீண்டஇடைக்கால இருளால் விழுங்கப்பட்ட இலக்கியங்கள் பலவாக வேண்டும். சிதிலமான பழைய சுவடிகளைத் தேடியெடுத்துச் சென்ற சிலவருடங்களாக அச்சியற்றிவெளிப்படுத்திவரும் சில பெருபகாரிகளின் அரியமுயற்சியாற் கிடைத்துள்ள சில சங்க இலக்கியங்கள் தவிரப் பழம் பண்டைத் தமிழகச்செய்தி தெரிவிக்கும் தக்கசாதனங்கள் வேறுகிடையா. கிடைக்கும் சில சங்கநூல்களிலும் சங்கப்புலவர்சரிதம்பற்றிய குறிப்புக்கள் காண்பது அரிது. இந்நிலையில், திருவள்ளுவரைப்பற்றிய சரிதக் குறிப்புக்களைத் தெளிந்து துணிதல் எளிதன்று. எனினும், சங்கநூல்களிலும் பழைய பாட்டுக்களிலும் கிடைக்கும் சில குறிப்புக்கள் வள்ளுவர்சரிதமுழுதையும் திரட்டித்தராவேனும், தற்காலத் தமிழுலகில் வழங்கிவரும் அவர்கதையின் உண்மையை ஆராய்வதற்கு ஒருவாறு உதவுகின்றன. அவையிற்றை உற்றுநோக்குங்கால், பிரஸ்தாபக்கதைகளில் நம்பிக்கை நலிவடையக் காண்போம்.

வள்ளுவரின் காலம், ஊர், குடிப்பிறப்பு, சமயம் முதலியவற்றைப் பலரும் பலபடியாகப் பேசிவருகின்றனர். இவைபற்றிய தற்காலப் பிரஸ்தாபங்களுக்கு உள்ள ஆதரவுகளைச் சிறிது விசாரிப்போம்.

கடைச்சங்கத்தின் கடைக்காலத்திற் சங்கப்புலவர் இறுமாப்பையடக்கின அவதாரபுருடர் வள்ளுவர் என்பார் பலர். இறவாப்புகழுடைய தம் குறணூலைக் கடைச்சங்கத்தில் அரங்கேற்றவந்த வள்ளுவரைப் புறக்கணித்து, அவர்தம் அரியநூலையும் அவமதித்த சங்கத்தாரை வள்ளுவர் தம் தெய்விகத்தன்மையாற் பொற்றாமரைக்குளத்தில் வீழ்த்தி அலமரச்செய்ததாயும், புலவர்கள் வள்ளுவரையும் அவர் தம் குறணூலையும் புனைந்துபாடித் தம்முயிரை இரந்துபெற்றதாயும், குறட்புகழின் பிறப்பே சங்கப்புகழின் இறப்பாகமுடிந்ததென்றும் கதைப்பார்பலர்

---

*இது, சென்னைச்சருவகலாசாலையார் வேண்டியாங்கு நானிது 1929-ம்௵ மார்ச்சு௴ 11௳ பச்சையப்பன்கலாசாலையில் நடத்த உபந்நியாச விரி.

கதைக்கின்றனர். சிலதலைமுறையாகப் புலைமரத்தக்கலப்புடைய பார்ப்பான் ஒருவனுக்கும் புலைப்பிறப்பும் பார்ப்பனவளர்ப்புமுள்ள கீழ்மகள் ஒருத்திக்கும் பிறந்த சிறார் எழுவருள், கடைமகவே வள்ளுவரென்றும், குறிசொல்லுபவரும் பறையருக்குப் புரோஹிதருமான வள்ளுவவகுப்பினால் வளர்க்கப்பெற்றமையின் வள்ளுவரென்பது இவருக்குக் காரணப்பெயராயிற்றென்றும், இவர் மயிலாப்பூர்வணிகனான ஏலேலசிங்கனால் வறுமைவருத்தங்கள் நீக்கப்பெற்று வாசுகியென்னும் வேளாண்மகளை மணந்து வாழ்ந்து மதுரைச்சங்கவீறழித்துப் பேறுபெற்றாரென்றும் தற்காலக் கதைகள் கேட்கின்றோம். இவற்றுள் ஒன்றுக்கேனும் பழநூலாதரவு இருப்பதாகத் தெரியவில்லை. கிடைக்கும் சில பண்டைக் குறிப்புக்களும் இக்கதைகளின் பொய்ம்மைகுறிக்கக் காண்கின்றோம்.

முதலில், வள்ளுவர் மூன்றாஞ்சங்கத்தை முற்றுவித்தவரலாற்றின் உண்மையைச் சிறிது ஆருவி யாராய்வோம். குறட்சுவடிகளிற் காணப்படும் திருவள்ளுவமாலை எனும் புனைந்துரைப்பாட்டுக்களை அடிப்படையாகக்கொண்டு இக்கதை நடக்கின்றது. வள்ளுவமாலை உள்ளபடி கடைச்சங்கப்புலவராற் பாடப்பட்டதுதானா? என்ற வினா நிற்க; அப்புலவர்பாக்களே வள்ளுவமாலையெனக்கொள்ளினும், சங்கப்புலவர் வள்ளுவரை அவமதித்து அவரால் வீறடக்கப்பட்டதற்கேனும், அவர்தம் இறவாக்குறளால் அப்புலவர்முன் அரங்கேற்றப்பட்டதற்கேனும் ஆன்ற சான்று ஏதும் அவ்வள்ளுவமாலைப்பாக்கள் சுட்டக் காண்கின்றிலம். கடைச்சங்கப்புலவராற் பாராட்டிச் சேமித்துவைக்கப்பட்ட நூற்றிரட்டுக்களுள் அப்புலவர்சிலர் புனைந்துரைத்த பாக்கள் காணப்படுகின்றன. கடைச்சங்கத்தார் நூற்றிரட்டுக்களில் திருக்குறளும் ஒன்றென்பது தமிழர் யாவருக்கும் ஒப்பமுடிவதாகும். அத்திரட்டு நூல்களுள்ளும் வள்ளுவர் நூல் தலைசிறந்ததென்பதற்கு இடைநெடுங்காலம் பிற பலநூலும் வழக்கிழந்தொழியவும், என்றும் பிரபலநூலாகக் குறள் நின்று நிலவியதே போதிய சான்றாம். நாம் அறிந்த சங்கத் திரட்டுநூல்களாவன: பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு முதலியன ஆம். இவையனைத்தும் கடைச்சங்கப்புலவரியற்றியனவும், அவர்க்கு முற்பட்ட புலவர் இயற்றியவற்றுள், சேமித்து

வைக்கத்தக்க சிறப்புடையனவாகக் கடைச்சங்கத்தாரும் பிறரும் கண்டு திரட்டியனவுமாக முடியும். இத்திரட்டு நூல்களுள், தகவுமிகவுடைய திருக்குறளின் பெருமைநோக்கிச் சங்கப்புலவரனைவரும் இதனைப் புனைந்து பாடியிருக்கலாம். அன்றி, வேறுசில நூல்களுக்கும் இவ்வாறே அவரனைவரும் சிறப்புக்கவிகள் தந்திருப்பின் அந்நூல்கள் வழக்கிழந்த காலத்தே சிறப்புப்பாயிரச்செய்யுட்கள் இறப்பின்வாய்ப்பட்டும் இருக்கலாம். குன்றாவழக்குடைக்குறளொடு அதன் புகழ்மாலைப்பாக்களும் நின்று நிலவிவந்திருக்கலாம். இதனுண்மை எப்படியாயினும், திருவள்ளுவமாலையில் வள்ளுவர் கடைச்சங்கத்தின் கடைக்காலத்திற் சங்கத்தை வீறழித்த கதை சுட்டுங் குறிப்பு ஒன்றேனும் இல்லை.

கடைச்சங்கக் கடைநாளிற் றோன்றித் தம் குறணூல் அரங்கேற்றுதலினிடையே வள்ளுவர் மதுரைச்சங்கத்தை அழித்த கதை மெய்யாமேல், புலவர் சங்கமிருந்து இயற்றிய பழம்பனுவல்களிற் குறளடிகள் குறிக்கப்படக் காரணமில்லை. மூன்றுஞ்சங்கப்புலவர் நூல்களிலேயே சுட்டப்படமுடியாத பின்வந்த திருக்குறளருந்தொடர்கள், அச்சங்கத்தாருக்குப் பலநூற்றாண்டுகளுக்கு முன் எழுந்து அவரால் பாராட்டிச் சேமித்துப் பாதுகாக்கப்பட்ட பழந்தொகைப்பனுவல்களிற் சுட்டப்படுமாறில்லையென்பது ஒருதலை. ஆனால் மதுரைச் சங்கச் சதுரர் நூல்கள் பலவற்றுள்ளும், அவர் போற்றுதற்கான அவருக்கு முற்பட்ட மிகப் பழைய தமிழ்த்திரட்டு நூல்களுள்ளும் வள்ளுவரும் அவரறநூலும் பலவேறிடங்களிலும் பாராட்டப்பட நாம் காணுங்கால், வள்ளுவரை அப்படிப் பாராட்டி யெடுத்தாளும் பாவலருக்கு அவர் சமகாலத்தவராதல் வேண்டுவதொன்று; அன்றேல் முன்னோராதல்வேண்டுவதொன்று; இஃதன்றிக் காலத்தாற் பிந்தியவராகக்கருதற் கிடமில்லையன்றோ! தமக்கு முற்பட்ட இடைச்சங்கச்செய்யுளும் பிறவுஞ் சேர்த்துக் கடைச்சங்கத்தார் திரட்டிய கலித்தொகை புறநானூறு முதலிய பழைய நூல்களிலும் குறளை மதிப்புடன் எடுத்தாளக்காண்கின்றோம். குறளடிகள் இவ்வாறு கடைச்சங்கப்புலவராலும் அவர்க்குமுற்பட்டபுலவராலும் எடுத்தாளப்பட்டதுமட்டுமில்லை; குறள்வாக்கியங்கள் அறத்தெய்வக்கூற்றாயும் வள்ளுவர் மெய்த்தெய்வப்புலவராயும் அவர் பலராலும் வாயாரவாழ்த்தப்படவுங் காணுங்நாம், வள்ளுவர் அவர்க்குச் சமகாலத்தவரென்று கொள்ளுதலி

னும் அவர்க்கு முற்பட்டவராகக் கருதலே சால்புடைத்தாம். புலவரெவ ரும் தம் காலத்தவரால் தலைநின்ற தேவநாவலராய் மதிக்கப்படும் வழக் கம் யாண்டும் இல்லை. பெரும்பாலும் சமகாலத்தவரால் அவமதிப்பும் தா மியற்றிய நூலின் மெய்ப்பெருமைவலியாற் பிற்காலத்தவரால் மேம்பாடும் அடைவதே புலவருலகியல்பு. தெய்வப் பாவலராக வள்ளுவரைச் சங்கப் பழம்புலவர்கள் கூறுவதால், அவர்தமக்கு வள்ளுவர் நீண்ட காலத்துக்கு முற்பட்டவராகவும், அவரதநூலின் இறவாச்சிறப்பு அங்கீ கரிக்கப்படுதற்குப் போதிய அவகாசம் அக்குறளுக்கும் அதனடிகளைப் பாராட்டி எடுத்தாளும் சங்கப்பனுவல்களுக்கும் இடையே ஏற்பட்டிருக்க வும் வேண்டும். இது சம்பந்தமாய்த் திருக்குறளடிகளைச்சிந்திக்கச் செய்யும் சில சங்கச்செய்யுட்டொடர்களை ஈண்டுக் குறிப்போம்:—

1. இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்றும்
நல்லா ளிலாத குடி. (1030)

தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
ஓங்குகுல நையவத னுட்பிறந்த வீரர்
தாங்கல்கட னாகுந்தலை சாய்க்கவரு தீச்சொல்
நீங்கல்மட வார்கட னென்றெழுந்து போந்தான்.

(சீந்தா—காந்தருவ—6)

2. வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள். (1105)

வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய வேய்மென்றோட்
பூட்டார் சிலைநுதலாட் புல்லா தொழிகேனே.

(சிந்தா—குண—192)

3. கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். (1137)

எண்ணில் காம மெரிப்பினு மேற்செலாப்
பெண்ணின் மிக்கது பெண்ணல தில்லையே.

(சீந்தா—குண—148)

4. கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல். (894)

யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர் (895)

வேந்தொடு மாறுகோடல் விளிகுற்றார் தொழிலதாகும்.

(சிந்தா—குண—239)

5. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடையார். (463)

வாணிக மொன்றுந் தேற்றாய் முதலொடுங் கேடு வந்தால்
ஊணிகந் தூட்டப் பட்ட வூதிய வொழுக்கி னெஞ்சத்
தேணிகந் திலேசு நோக்கி இருமுதல் கெடாமை கொள்வார்
சேணிகந் துய்யப் போகின் செறிதொடி யொழிய வென்றார்.

(சிந்தா—காந்தரு—278)

6. இல்லானை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல். (905)

இல்லானை யஞ்சி விருந்தின்முகங் கொன்றநெஞ்சிற்
புல்லாளனாக.

(சிந்தா—மண்மகளிலம்பகம், செய்—217)

7. உலகந் தழீஇய தொட்ப மலர்தலும்
கூம்பலு மில்ல தறிவு. (425)

கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி—தோட்ட
கயப்பூப் போன் முன்மலர்ந்து பிற்கூம்புவாரை
நயப்பாரு நட்பாரு மில்.

(நாலடி—நட்பாராய்தல்—5)

8. ஒருநா ளெழுநாள்போற் செல்லும் சேட்சென்றார்
வருநாள்வைத் தேங்குபவர்க்கு. (1269)

பெறினென்னாம் பெற்றக்கா லென்னா முறினென்னாம்
உள்ள முடைந்துக்கக் கால். (1270)

ஊடற்கட் சென்றேன்மற் றேழ்நி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு. (1284)

..................................................................................................

..................................................................................................

புலப்பேன்யான் என்பேன்மன் அந்நிலையே அவற்காணிற்
கலப்பேன் என்னுமிக் கையறு நெஞ்சே.

..................................................................................................

..................................................................................................

ஊடுவேன் என்பேன்மன் அந்நிலையே அவற்காணிற்
கூடுவேன் என்னுமிக் கொள்கையி னெஞ்சே.

..................................................................................................

..................................................................................................

துனிப்பேன்யான் என்பேன்மன் அந்நிலையே அவற்காணில்
தனித்தே தாழும் இத்தனி நெஞ்சே.

எனவாங்கு

பிறைபுரை யோர்நுதால் தாமெண்ணி யவையெல்லாம்
துறைபோத லொல்லுமோ தூவாகா தாங்கே
அறைபோகு நெஞ்சுடை யார்க்கு.

(கலி-67)

9. துஞ்சுங்காற் றோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து. (1218)

ஓ ஓ கடலே,
தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற இமைபெடுத்துப்
பற்றுவென் என்றியான் விழிக்குங்கால் மற்றுமென்
நெஞ்சத்துள் ளோடி யொளித்தாங்கே துஞ்சாநோய்
செய்யு மறனி லவன்.

(கலி-144.)

10. காமமும் நாணு முயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பி னகத்து. (1163)

11. காம முழந்து வருந்தினார்க் கேம
மடலல்ல தில்லை வலி. (1131)

நலிதருங் காமமுங் கௌவையு மென்றிவ்
வலிதின் உயிர்காவாத் தூங்கியாங் கென்னை
நலியும் விழுமம் இரண்டு.

(கலி-142)

காமக் கடும்பகையிற் றோன்றினேற் கேம
மெழினுத லீத்தவிம் மா.

(கலி-139)

12. அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை. (315)

சான்றவர் வாழியோ சான்றவிர் என்னும்
பிறர்நோயும் தந்நோய்போற் போற்றி அறனறிதல்
சான்றவர்க் கெல்லாம் கடனா லிவ்விருந்த
சான்றீர் உமக்கொன் றறிவுறுப்பென்.

(கலி-139)

13. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில். (549)

குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்றானை
விடுவழி விடுவழிச் சென்றாங்கு அவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே.

(கலி-130)

14. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். (263)

நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும் மறையாவா
நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின்,

(கலி. நெய்தல்-8)

15. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும். (928)

... ... ... காமம்
மறையிறந்து மன்று படும். (1138)

தோழிநாம்,
காணாமை யுண்ட கருங்கள்ளை மெய்கூர
நாணாது சென்று நடுங்க வுரைத்தாங்குக்
கரந்ததூஉங் கையொடு கோட்பட்டாங் கண்டாய்.

(கலி. முல்லை-செய்-15)

16. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. (791)

நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம் மொட்டியோர் திறத்தே.

(நற்றிணை-32)

17. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். (580)

முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனிநா கரிகர்.

(நற்றிணை)

18. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. (20)

நீரின் றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி.

(நற்றிணை-1)

19. சிறப்பீனும் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு. (31)

அறத்தான் வருவதே யின்பம்மற் றெல்லாம்
புறத்த புகழு மில. (39)

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல,

(புறம்-31)

20. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். (528)

வரிசை யறிதலோ வரிதே பெரிதும்
ஈத லெளிதே மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே.

(புறம்-121)

21. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். (679)

நட்டார்க்கு நல்ல செயலினி தெத்துணையும்
ஒட்டாரை யொட்டிக் கொளலதனின் முன்னினிதே.

(இனியவைநாற்பது-18)

22. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும். (349)

அற்றது பற்றெனி லுற்றது வீடு.

(திருவாய்மொழி-1-2-5)

23. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும். (370)

சென்றாங் கின்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே அப்போ தேவீ டதுவே வீடு வீடாமே.

(திருவாய்மொழி. 8-8-6)

24. அங்கணத்து ளுக்க வமிழ்தற்று. (720)

ஊத்தைக்குழியி லமுதம் பாய்வதுபோல்.

(பெரியாழ்வார்திருமொழி-4-6-9)

25. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின். (126)

ஒருமையு ளாமைபோ லுள்ளைந் தடக்கி.

(திருமந்திரம்-முதற்றந்திரம்-21.)

26. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறு நாடு கெடும். (553)

நாடொறு மன்னவ னாட்டிற் றவநெறி
நாடொறு நாடி யவனெறி நாடானேல்
நாடொறு நாடு கெடுமுட னண்ணுமால்
நாடொறுஞ் செல்வ நரபதி குன்றுமே.

(திருமந்திரம்-இராசதோடம்-2.)

27. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். (359)

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் என்றமையால்
சார்புணர்வு தானே தியானமுமாம்—சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று.

(திருக்களிற்றுப்படியார்)

28. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். (348)

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவ ரென்று—நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவ ருரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்.

(உமாபதிசிவாசாரியர் நெஞ்சுவிடுதூது)

29. .... .... .... அவர்சென்ற
நாளெண்ணித் தேய்ந்த விரல். (1261)

கோடுமெ ணிஞ்சி நீணகர் வரைப்பி
னோவுறழ் நெடுஞ்சுவர் நாள்பல வெழுதிச்
செவ்விரல் சிவந்த வவ்வரிக் குடைச்சூ
லணங்கெழி லரிவையர்.

(பதிற்றுப்பத்து-68.)

30. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும். (319)

முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றிகாண்.

(சிலப். வஞ்சினமாலை. வரி-3, 4)

31. தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. (55)

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வம் தொழுதகைமை திண்ணமால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து.

(சிலப். கட்டுரைகாதை)

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்

(மணிமேகலை; காதை 22-வரி-59-61)

32. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (110)

நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பாடிற்றே யாயிழை கணவ.

(புறம்-34)

இன்னும் இத்தகைய மேற்கோள்வாக்கியங்கள் பல எடுத்துக் காட்டலாமாயினும் ஈங்கு இவை போதியவாம். இவ்வாறு உரையொடு பொருளும் உறழும் பலவிடங்களையும் காட்டுமிடத்துக் குறளாசிரியரே அவற்றைப் பிறநூல்களினின்றும் இரவல்கொண்டிருக்கலாகாதோ எனின், இவ்வாக்கியங்களின் பொருளேக்கும் நடைப்போக்கும் உற்று நோக்குவார்க்குக் குறளே பிறநூலுடையாருக்கு மேற்கோளாதல் வெள்ளிடைமலையாம். அன்றியும், சாத்தனார் மணிமேகலையினும், ஆலத்தூர் கிழார் புறப்பாட்டிலும் குறளைப் பாராட்டிப்பாடக் கண்டுவைத்தும், குற

ளாசிரியர் பிறநூலினின்று இரவல்கொண்டாரெனக் கூறுதல் சிறிதும் பொருந்தாக்கூற்றும். எனவே சங்கப்புலவர்பலராலும் எடுத்தாளப்படும் குறள் அவர்தமக்குக் காலத்தான் முந்தியதாதல் ஒருதலை. அன்றியும், கடைச்சங்கப்புலவரான சாத்தனார் 'பொய்யில்புலவன்பொருளுரை'யெனவும் ஆலத்தூர்கிழார் 'அறம்பாடிற்றே'எனவும் குறளையும் அதனாசிரியரையும் போற்றிப்பேணக்காணும்காம், இப்பழம்புலவராற் குறள் மெய்ம்மறையெனவும், அதனாசிரியர்பொய்யா அறக்கடவுளெனவும் பாராட்டப்படுதற்கு வள்ளுவரின் மெய்ப்பெருமை அப்புலவருக்கு வெகுநீண்டகாலத்துக்கு முன்னே நிலைபெறடைந்திருக்கவேண்டுமென்பதை எளிதிற் றெளியலாகும். நமக்குக் கிடைக்கும் சங்கநூல்களெல்லாம் கடைச்சங்கப்புலவராலேயே இயற்றப்பட்டன எனக் கொள்ளற்கும் இல்லை. சில புறப்பாட்டுக்களும் கலிகளும் இடைச்சங்கப்புலவராலேனும் எனைத்தானும் கடைச்சங்கத்துக்கு முற்பட்ட புலவராலேனும் ஆக்கப்பட்டிருக்கவேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அவர் நூல்களிலும் குறள் எடுத்தாளப்படுதலால் வள்ளுவர் கடைச்சங்கக் கடைக்காலத்தவருமில்லை; முதலிடைக்காலத்தவருமில்லை; அச்சங்கத்துக்கு நெடும்பல்லாண்டுகட்கு முன்பிருந்தவராவரென்பது இனிது போதரும்.

இனி, தொல்காப்பியம் முதற்சங்கக்காலத்து ஆக்கப்பெற்று இடைச்சங்கத்தாருக்கு இலக்கணமாயிற்றென்பது தமிழரெல்லார்க்கும் ஒப்ப முடிந்ததொன்று. கடைச்சங்கக்காலத்திலும் தொல்காப்பியம் ஆட்சியிலிருந்ததாயினும், அதன்விதிகளுக்கு மாறுபட்டவழக்குக்கள் அச்சங்க நூல்களிற் பயிலக் காண்கின்றோம். உதாரணமாக: மொழிக்குமுதலாகாதென்று தொல்காப்பியம் விதந்துவிலக்கிய சகரத்தை முதலாகக்கொண்ட தமிழ்மொழிகள்பல கடைச்சங்கஇலக்கியங்களிற் பயிலக் காண்கின்றோம். வள்ளுவர்நூலில் வடசொல்லாய்வந்துவழங்கும் சமண், சலம் என்ற இரண்டொன்று தவிரத் தனித்தமிழ்ச் சகரமுதன்மொழிகள் காணல் அரிது. இதனால், தொல்காப்பியவிதிகள்சில வழக்கிழந்த கடைச்சங்கக் காலத்துக்குமுன்னரே அவ்விதிகள் சிறப்புமற் பேணப்பெற்ற இடைச்சங்கப் பழங்காலத்தையடுத்தே வள்ளுவரின்குறள் எழுந்திருக்கவேண்டுமென்று ஊகிப்பதும் இழுக்காது.

சாணக்கியம் முதலிய ஆரியநீதிநூல்களினின்று அறங்களைத் திரட்டி வள்ளுவர் நூல்செய்திருக்கவேண்டுமென்றும், ஆதலால், சாணக்

கியர் முதலியோருக்கு வள்ளுவர் பிற்காலத்தவராயிருக்கவேண்டுமென்னும் சிலர் கூறுகின்றனர். இதற்குப் பரிமேலழகர் 662-ம் குறளின் விசேடக்குறிப்பில் "வியாழ வெள்ளிகளது அணிபுதொகுத்துப் பின் நீதிநூலுடையார்கூறியவாறு கூறுகின்றமையின்" என்று எழுதியுள்ள வாக்கியத்தை ஆதாரமாக்கி, அவ்வாக்கியத்திற்கண்ட 'பின் நீதிநூலுடையார்' என்ற சொற்றொடர் சாணக்கியர்முதலாயினரைச் சுட்டுவதாகக் கொள்கின்றனர். இதுவே பரிமேலழகர்கருத்தாயின் அவர் விசதமாக்கியிருப்பர்? அன்றியும், பின் னீதிநூலுடையார் யாரேயாயினும் அவர்தம் வழிநூல்களுக்குக் குறள் சார்புநூலாகும் என்னுங்கருத்தைப் பரிமேலழகர் இவ்வாக்கியத்தாற் குறித்ததாக ஏற்படுமாறில்லை. ஆழச் சிந்தித்தால் வியாழ வெள்ளிகளின் நீதிநூல்களுங்கூடக் குறளுக்கு முதனூலெனப் பரிமேலழகர் இவ்வாக்கியத்திற் சுட்டிலரென்பது தெற்றென விளங்கும். வியாழ வெள்ளிகளின் அணிபுகளைத் தொகுத்த ஆரியநீதிவழிநூலுடையார்முறைக்கும் குறளாசிரியர் அறம்வகுத்த முறைக்கும், எடுத்துக்கொண்ட குறட்பொருள்பற்றியுள்ள ஒப்புமையை இவ்வாக்கியத்தாற் கூறியதன்றி, ஈண்டுப் பரிமேலழகர் காலமுறையால் முதல் வழி சார்புநூல்களாமாறு வகுத்துக்கூறவந்தாரில்லை. இவ்வாறே பிற இடங்களிலும் குறட்கருத்துக்களோடு வடநூலுடையார்கொள்கைகளின் ஒப்பும் மாறுபாடும் பரிமேலழகர் எடுத்துக்காட்டிச்செல்லுதலும் கவனிக்கத்தக்கது.

சங்கத்தார்பாடியதாகக்கொள்ளப்படும் திருவள்ளுவமாலைச்செய்யுட்கள்பல குறளை ஆரியமறைகளுக்கு ஒப்பதும் மிக்கதுமாமென்று விசதமாகப் பாராட்டுகின்றன. வேதங்களுக்கு மிகப்பிந்திய மனுவாதி வடமொழிநூலொன்றுமே குறளுக்கு முதனூலாகாதென்னுங்குறிப்பும் திருவள்ளுவமாலைச்செய்யுட்களிற் காணலாம். இவ்வாறு மனுவாதி வடமொழி அறநூலுடையாரே வள்ளுவருக்கு முதனூலுடையாராகாத போது, அவரைப் பின்பற்றிய மிகப் பிற்பட்ட கேவலம் நீதிநூலுடைய சாணக்கியாதியர் வள்ளுவருக்கு வழிகாட்டிகளாவது எப்படியோ?

மேலும், நீதி அறத்தில் அரசனால் வற்புறுத்தப்படும் ஒருகூறேயாமாகலின், அறநூல்களினின்று நீதிநூல்களைப்பிரித்துத் தொகுக்கலாவதன்றிக் கேவலம் நீதிநூல்களினின்று அறநூல்களியற்றப்படுமாறில்லை.

பரிமேலழகரே பலவிடத்தும் நீதிநூலின்வேறாய அறநூல்களுண்மையைச் சுட்டியுள்ளார். திருக்குறள் அறநூலாகவே, அறத்தின் ஒருபகுதியான நீதிகளைமட்டுங்கூறும் வடமொழி நூல்களின்வழி நூலாக வள்ளுவர் குறளை இயற்றினர் என்பது பொருந்தாக்கூற்றாம்.

இன்னும், ஆரிய தருமசாத்திர முறை வேறு, தமிழறநூன்மரபு வேறாகும். இருமுறைகளையும் ஒத்துணர்ந்த வள்ளுவர்திருக்குறள், தமிழ்மரபுவழுவாது பொருளின்பகுதிகளான அகப்புறத்துறையறங்களை மக்கள்வாழ்க்கைமுறைக்காமாறு ஆராய்ந்து அறுதியிட்டு வடித்தெடுத்துவிளக்கும் தமிழ்நூல். தமிழ்மரபும் ஆரியர் சம்பிரதாயமும் அறிந்த பரிமேலழகர் தம் குறளுரையில் ஆங்காங்கே இவ்விருபெரு வழக்குக்களின் இயைபும் முரணும் எடுத்துக்காட்டிச் செல்லுமழகு பாராட்டத்தக்கது. இதைவிட்டுத் திருக்குறள், சாணக்கியாதி வடமொழி நீதி வழிநூல்களுக்குப்பின் அவற்றின் சார்புநூலாக எழுந்ததென்பார் தமது ஆரியமதிப்பும் காதலும் வெளிப்படுத்துவதன்றிச் சரிதவுண்மை துலக்குபவராகார். தமிழிற் பெருமையுடைய அனைத்தும் ஆரியநூல்களினின்று திரட்டப்பட்டிருப்பதாகக்காட்டி மகிழ்வார் சிலர்க்கன்றி, நடுநிலையாளருக்கு வள்ளுவர்குறள் தமிழில் தனி முதலறநூலேயாகுமென்பது வெள்ளிடைமலையாம்.

## ௨. வள்ளுவர் குடிப்பிறப்பு.

திருவள்ளுவர் ‘ஆதி’ என்னும் புலைமகளுக்கும் ‘பகவன்’ என்னும் பார்ப்பனனுக்கும் பிறந்த எழுவரில் இளையவர் என்று சில்லோர் சொல்லும் கதையினை நல்லோர்பலரும் நம்புகின்றார். இக்கதையுரைப்போர், “‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ’ மாகையால், வள்ளுவர் தம் முதற்குறளில் ‘..., ஆதி பகவன் முதற்றே யுலகு’ எனுந்தொடராற் றம் ‘தந்தை தாய்ப் பேணி’ யுள்ளார்.”—என்று கூறித் தம்கோள் நிறுவிவிட்டதாக எண்ணி மகிழ்கின்றனர். இக்கதைக் கிவர்விருப்பும், இவர் விருப்புக் கிக்கதையுமே ஆதாரமாவதன்றிப் பிறிது பிரமாணம் காட்டக் காணேம். முதலில் நாயனார் கடவுள்வழிபாட்டு முதற்குறளிற் றம் பெற்றோரை உலகோற்பத்திக்கு முதற்காரணராகச் சுட்டத்துணிவார் என்பது சிந்திக்கத்தக்கது. இனி இப்பெயருடையார் நாயனாரின் முதற்குரவ ரென்பதைப் பிறிது சான்றுகொண்டு நிறுவியபின்னன்றே, இக்

குறளி லக்குரவர் பெயரைக் குறிக்க ஆசிரியர் கருதினரா எனு மாராய்ச்சி எழவேண்டும். ஐய மகற்ற ஆராயுங்கால் ஐயப்படுவதனையே ஆதாரவாக் கொண்டு ஒரு சித்தாந்தம்செய்வது தருக்கமுறையாமா? முதற்குற ளிற்கண்ட 'ஆதி'—'பகவன்' எனுஞ் சொற்கள் குறளாசிரியரின்பெற் றோரைக் குறிக்குமாவென்று விசாரிக்குமுன், அப்பெயருடையபெற்றோ ருண்டெனக் கண்டறியவேண்டியது முதற்கடனன்றோ? குறட்சொற் களையேகொண்டு அப்பெயரிய பெற்றோ ருண்டெனவும், அப்பெற்றோருண் மையைச் சங்கையற்ற பிரமாணமாகக்கொண்டு குறள்மொழிக ளவரையே குறிக்குமெனவும் அநுமானிப்பது பிடிவாதிகளின் அபிமானவாதமாக லாம்; ஆனால் உண்மைகாணும் வாதமுறையாகாதென்பது வெளிப்படை.

இனி, 'பகவன்' என்பது இவர்தந்தையின்பெயரென்பதற்கு யாதொரு நூலாதாரவுமில்லாததோடு, அதற்கு மாறாக "யாளி, கூவற் றாண்டு மாதப் புலைச்சி, காதற் காசனி யாகி மேதினி, யின்னிசை யெழுவர்ப் பயந்தன ளீண்டே" எனும் ஞானமிர்தநூலடிகளால் வள்ளுவரின் தந்தை 'யாளிதத்தன்' எனும் வேதியன் என் றொரு கதை யும் கேட்கின்றோம். இவ் விருகதைகளில் விலக்குவதெதனை? வேண்டுவ தெது? இன்னும், 'பகவன்' எனும் சொல் தமிழிலும் இருக்குவேதத்தி லும் அவ்வுருவிற் பயில்வதன்றி, பாணினியாதி வையாகரணிகளின் விதிப்படிக்கும் வேதத்துக்குப்பிந்திய வடமொழி நூல்களிலும் 'பகவன்' எனும் பிரயோகம் காணலரிது. 'பகவான்' என்பதே சரியான ஆரியச் சொல்லாகும். இதனாற் குறளாசிரியர் பாணினிக்குமுற்பட்டவரெனத் துணிதற் கிடமாவதன்றிக் கடைச்சங்கக்கடைக்காலவேதியனொருவ னுக்குப் 'பகவன்' எனும் பெயருண்மை அசம்பாவிதமாகும். எனைத் தானும் இக்கதைக்குக் கதைப்பவர்காதலன்றிப் பிறிது பிரமாண மில்லை. பெருரில்லாத பலர் பிற்காலத்திற் பாடிவைத்த தனிப்பாடல்களை யொரு பொருட்படுத்திப் பண்டைச்சரிதங்கள் துணிவது, எதனிலவுக் காதார மாகுமன்றி, உண்மைதெளிதற் குதவுமாறில்லை. பலநூற்றாண்டு களுக்கு முன் பின் னிருந் திறந்த நச்சினார்க்கினியர் பரிமேலழகர்களைக் கூட்டிவைத்துப் போட்டிசெய்வித்தும், காளிதாசன் போஜராஜன் பவபூதிகளைச் சேர்த்தவர் தம்முட் சல்லாபச்சண்டை யுண்டுபண்ணியும் வழங்கிவரும் பல கதைகளையும் தனிச் செய்யுட்களையும் கேட்கும்

நாம், அனையதொரு பொறுப்பற்ற நாடோடிகளின் கதையை நம்பி அறத் 'தேவரை'ப் பறைப்புலையாக்கத் துணிவ தெவ்வாறு கூடும்?

இன்னும், இக்கதைக்குப் பண்டைச் சங்கப்பாட்டுக்களிலேனும் பழைய பிற பனுவல்களிலேனும் ஓராதாரமும் பெறாமையோடு, குறட் பழஞ்சுவடிகளெதனிலு மிக்கதையின் சார்பான தனிச்செய்யுட்க ளெழுதப்படாமையையும் கவனிக்கவேண்டும். திருவள்ளுவமாலைமுழுதையும் தொன்றுதொட்டு வரன்முறையேவந்த குறட்சுவடிகளி லெழுதிவருவானேன்? வள்ளுவரும் அவருடன்பிறந்த பிள்ளைகளும், தாதைவாதையால் வேதனைப்படும் ஆதியன்னையைத் தெருட்ட அவர் பிறந்தவுடன் சேனைப்பால்தானுமறியாச் சிறுகுதலைவாய்திறந் துபதேசித்த தெய்வக் கவிகளை அச்சுவடி பெயர்த்தெழுதிவந்தோர் புறக்கணித்துக் களைந்து கழிக்கக் காரணந்தா னென்னே? குறளுக் குரைகண்ட பண்டிதர் பதின் மரும் இவ்வரலாற்றுக்கவிகளைச் சுட்டாதொழிவானேன்? பிற்காலத்திற் பத்திவினயத்துடன் குறணூலை ஆராய்ந்து பதிப்பித்து வெளிப்படுத் திய நல்லூர் ஆறுமுகநாவலர் திருத்தணிகைச் சரவணப்பெருமாளையரனைய அரிய தமிழ்ப்பெரியாரும் திருவள்ளுவமாலைச் செய்யுட்களை மட்டுந் தழுவிப் பிறவற்றை நழுவவிட்டிருப்பதும் சிந்திக்கத்தக்க தன்றோ? நக்கீரரையும் கம்பரையும் தமிழகத்திற் றலைநின்ற அறிஞரனைவரையுமே வேதியர்குருதி பாதி விரவப்பெற்றதாற் பெருமையுற்றன ரெனப் பல கதைகட்டி, அக்கலப்பற்ற தனித்தமிழருள்ளே தகவுடைய ரில்லையென் றென்றைப் பொருளெச்சமாகக் கட்டித் தம்முட் டாம் மகிழும் சில நவீன விற்பனரின் கற்பனைத்திறத்தையன்றே ஆதிபால் எழுவரை 'வேளாவேதியன்' காதலற்றுக் கடமையிற்றந்தகதை நின்று நிதர்சனமாக்குகின்றது.

[கதைப்பவர்காட்டுங் கவிதைகளிரண்டு.]

இனித் "தேவை வள்ளுவனென்பானோர்பேதை" யெனும் திருவள்ளுவமாலைச்செய்யுளடியையும், "மெய்த்த திருவள்ளுவனார் வென் றுயர்ந்தார், கல்விநலத் துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார், சோமேசா" என்ற மாதவச் சிவஞானமுனிவரின் சோமேசர்முதுமொழிவெண்பாவையும் எடுத்துக்காட்டி, இவற்றால், திருக்குறளாசிரியரின் புலைக்குலப்பிறப்பு நாட்டப்படுவதாய்க் காட்டுவோரும் சிலருளர்.

முதலில் திருக்குறளின் சிறப்புப்பாயிரச்செய்யுட்கள் சங்கப்புலவராற் பாடப்பெற்ற செய்தியே சங்கையறத் தெளியப்பட்டதொன்றில்லை. வள்ளுவரால் வெல்லப்பட்ட சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர்மட்டும் தம் பிழைக்கிரங்கிக் குறளையும் அதனாசிரியரையும் புகழ்ந்து பாடியிருந்தால், ஒருவாறு அது நாம் கேட்கும் கதைவரலாற்றோடு சிறிது பொருத்தங்கொள்ளும். ஆனால், சங்கப்புலவரோடு அசரீரி, சிவபிரான், கலைமகள், மூங்கையரான உருத்திரசன்மர் முதலியோரும், அச்சேறி வெளிவராத சிலகுறட்சுவடிகளில் இன்னும் பலரும் பாடினதாய்க் காணப்படும் பலபாக்களையும் திரட்டிக் குறட் சிறப்புப்பாயிரமாக்கிவைத்திருப்பதைச் சிந்திப்போர்க்கு, திருவள்ளுவமாலைச்செய்யுட்களை வள்ளுவராற் பொற்றாமரையிற் றள்ளப்பட்ட சங்கப்புலவர் தம் பிழைபொறுக்கப் பாடின கதையின் உண்மை சங்கைக்கிடமாகும். அதனுடன் அச்செய்யுட்களை நிதானித்துக்கவனிக்குங்கால், தோற்ற சங்கப்புலவர் மனங்கசிந்து அத்தருணம் தத்தமுளத்துதித்த கருத்தை யப்படியே வெளியிட்டதான கதைக்கு மாறாக, ஒருவர் அல்லது ஒருசிலரே முன் சாவதான யோசனையுடன் பாடித் தொகுத்தபான்மையினை அப்பாக்களே நிரூபிக்கின்றன. வென்றுயர்ந்த வள்ளுவரைப் புகழவந்த சங்கப்புலவரின் பாக்கள் திருக்குறளியல்பும் பெருமையும் மட்டுங் குறிக்கவேண்டுவதியல்பாகவும், திருவள்ளுவமாலைச்செய்யுட்களை யுற்றுநோக்குவார்க்கு அவை திருத்தமாகப் பொருத்தங்காட்டுங் குறிப்புடன் எண்ணித் துணிந்து பாடிவைத்தபாட்டுக்களென விளக்கமாகும். மேலும், கதையின்படி பங்கமுற்ற சங்கப்புலவர் குறையிரந்தியற்றின தனிப்பாக்கள் குறளுக்குச் சிறப்புப்பாயிரமாமாறில்லை; சிறப்புப்பாயிரம் செய்தற்குரியர் "தன்னாசிரியன் தன்னொடு கற்றோன், தன்மாணாக்கன் தகுமுரைகாரன்" என்றின்னோருள் ஒருவரேயாகலானும், சங்கத்தார் இன்னோர்வகையில் யாருமாகாமையானுமென்க. திருவள்ளுவமாலை குறணூலின் சிறப்புப் பாயிரமென வழங்கப்பெறுதலால் அதனைச் சங்கப்புலவர் செய்தனரென்னுங் கொள்கை உறுதிபெறுமாறில்லை. இவ்வுண்மை யெதுவாயினுமாகுக. தற்காலம் அதனைச் சங்கையற்றதெனக்கொள்ளினும், அதனால் வள்ளுவர் புலையராமாறு தெளிதற்கில்லை. அவரைப் புலையராக்குவார் அதற் கெடுத்துரைக்கும் மேற்கோட்செய்யுள் இது:

"அறம்பொரு ளின்பம்வீ டென்னுமிந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை; அவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்" (திருவள்ளுவமாலை-௪)

எனும் மாமூலர்பெயர்கொண்ட இந்தச் செய்யுளுக்கு "அமானுஷ்யமான அரிய விழுமிய குறளறநூலையாக்கிய கடவுட்டன்மைவாய்ந்த தேவரை வள்ளுவனெனும் பெயர்கொண்டதொரு கேவலம் மனிதனாகவுட் கொண்டுபேசுவானுளனாயின், அவன் நாயனாரின் தெய்விகத்தன்மையறிய மாட்டாத அறிவீனன்" என்று குறிப்பதே பொருளாகும் திருவள்ளுவ மாலைக்கு உரைகண்ட திருத்தணிகைச் சரவணப்பெருமாளையரவர்களும், பிறர்மதமாக "ஒலிக்குறிப்பினாலே சாதியிழிவுதோன்ற வள்ளுவனென் பான் எனினு மமையும்" எனப் பிற்குறிப்பிற் சுட்டினரேனும், தம் மூன் னுரையில் "அறமுதலாக........வேதப்பொருள்களாகிய நான்கனது கூறு பாட்டைத் தெரிந்து........சொல்லிய தேவனை மறந்தாயினும் ஒருமனித னாக உட்கொண்டு வள்ளுவனென்றுசொல்லுதற்கு ஒருவனுளனாயின், அவன் அறிவில்லாதவனாவன்.........அச்சொல்லை அறிவுடையார் கொள் ளார்" என இப்பாட்டுக்குப் பொருள்கூறிப்போதலும் சிந்திக்கத்தக்கது. வள்ளுவச்சொல் அவர்காலத்திற் புலைக்குலவகுப்பின்பெயரெனத் தக்க பிறசான்றால் நாட்டினாலன்றி, இக்கவியில் வள்ளுவனென்பதற்கு இழி குலத்தோனெனப் பொருள்கொள்ளற் கவசியமே கிடையாது. அத் தகைய சான்று காட்டப்படாதநிலையில் இப்பொருளுரைப்போர் பிற் காலக்கதையைவைத்தே இக்கவிக்கு இப்பொருள்கூறமுயல்வதல்லால், இக்கவி அக்கதைக்கு மேற்கோளாமாறில்லையென்பது மலையிலக்காம்.

இனி மாதவச் சிவஞானயோகிகளின் சோமேசர்முதுமொழி வெண்பா சற்றேறக்குறைய 150 ஆண்டுகளுக்குமுன் எழுந்ததாகும்; அதனுள்,—

மெய்த்ததிரு வள்ளுவனார் வெண்குறள்பார்த்தார், கல்விநலம்
துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார், சோமேசா—உய்த்துணரின்
மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றா ரனைத்திலர் பாடு.

என்னும் வெண்பா வள்ளுவரைப் புலைக்குலத்தவராக்குவாரால் மேற்கோளாக எடுத்துக்காட்டப்படுகிறது.

இக்கவியால், அதனைச் செய்தவர்காலத்தில் வள்ளுவர் ஆதிபாற் பகவனுக்குப் பிறந்த கதை வழங்கியதென்பதும், அக்கதையை அம்முனிவர் தம் மூதுமொழிவெண்பாவிற் சுட்டியுள்ளார் என்பதும் மட்டும் கிடைப்பதாகும்; மற்றப்படி அக்கதைக்கு மூதிய மூன்றுதாவுண்டென்பதேனும், அதன்சரிதவுண்மையை அம்முனிவர் ஆராய்ந்து துணிந்த தன்முடிபாகக் காட்டவந்தாரென்பதேனும் அவர்வெண்பாவால் தெளிதற்கில்லை. எடுத்தகுறளுக்கு ஒருகதைகாட்டுமவசியத்தின் பொருட்டு அவர்காலத்திற் கேட்கப்பட்ட இக்கதையை அவர் தம் வெண்பாவில் முடைந்தாரென்பதே முறையாமன்றி, மற்றிதன் உண்மையை ஆய்ந்து தெளிந்து நிலைநிறுத்துவதே முனிவர்கருத்தெனக்கொள்ளின் அதற்குப் பல முரண்பாடு காண்கின்றோம். சங்கத்தை வள்ளுவர் வென்றடக்கியதற்கு வேறுசான்றின்மையை முன்னரே சுட்டியுள்ளோம். அன்றியும், இம்மூதுமொழிவெண்பாவிற் பின்னெடுத்துக்காட்டுங் குறளொடு இக்கதைபொதிந்த முன்னடிகள் முரணுவது வெளிப்படை. 'கீழ்ப்பிறந்தும் கல்வி யுடைய சான்றோரின்பெருமை, மேற்பிறந்தும் கல்லாத கயவர்க்கில்லை'—என்பதை வலியுறுத்தவந்த குறளை யுதகரிக்கும் கதையில், தேவரைத்தவிர யாவராலுமெதிர்கொளுக் கல்விநலம்பெருகப் பெற்றுயர்ந்த சங்கத்தாரைக் கல்லாதாரெனக் குறிப்பது பொருத்தமாமா? அக்குறிப்பு முனிவர்க்கில்லையென்பதைக் 'கல்விநலந்துய்த்த சங்கத்தார்' எனும் அவர்சொற்றொடர்விசேடமே விசதமாக்கும். இதுவுமன்றிப் பலவேறுகுலமும் தொழிலுமுடைய சங்கப்புலவரனைவரும் ஒக்க மேற்குல வுயர்குடிப்பிறப்புடைய ரன்றாகவே, கதைகூறுமாறு வள்ளுவரால் வெல்லப்பட்ட சங்கத்தாரெல்லாரும் "மேற்பிறந்தார்" எனவும் "கல்லாதார்" எனவும் முனிவர்கருதற் கிடனில்லை—முறையுமில்லை அதனால் இவ்வொருகவிகொண்டு கற்றுப்பாடுடைய குற்றமுடைமைக்காக வள்ளுவரைப் புலைக்குடிப் புகுத்துவது அவசியமும் அழகுமில்லை. சிவஞானயோகிகளே ஆராய்ச்சியின் பயனாகத் தாம்கண்டமுடிபென இக்கதையின் உண்மையை நிலைநாட்ட நினைத்தாலும் அவராய்ந்த ஆதாரங்களையும் கொண்டமுடிவுக்கு அவர்கண்ட நியாயங்களையும் நாம் விசாரிப்பது முறையாமேல், ஈண்டவர் தந்தாலியுதலக்குநோக்கின்றிக் கேட்ட

கதையைப் பாட்டில்முடைந்து கொண்டு அக்கதைக்கு அவரை ஆசிரிய ராக்கவும் அவர்கவிகொண் டதனை நிலைநாட்டவும் முயல்வது முறையன் றாகும்.

[பறைக்குல மறுக்குங் குறிப்புக்களாவன.]

இனி, வள்ளுவரின் குலமும் குடிப்பிறப்பும் நெட்டிடையிருளில் மறைபட்டுத் தெளிதற்கரிதாகும். பண்டைப் பெரியார்பிறப்பனைத்தும் இவ்வாறே தேடரிய முயற்கொம்பாகத் தெரிகின்றோம். நக்கீரர் முதலிய சங்கப்புலவரும், அவர்தமக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்ட கம்பனைய கவிவாணரும் தத்தம் நூலளவில் தமிழகத்தே வாழ்வு பெற் றிருத்தலன்றி, மற்றப்படி அவர்களின் குலம் குடிகளைவிளக்கும் குறிப் புக்களொன்றும் கிடைக்கக்காணோம். காளிதாசன் முதலிய வடமொழிமகா கவிகளும் இப்படியே அவர்தம் நூலளவிலன்றிப் பிறாண்டு நமக்கு ஏதில ராகின்றனர். சரிதவுணர்ச்சியும் பயிற்சியும் தொன்றுதொட்டு நிலவி வரும் மேனாட்டிலுங்கூட அண்ணிய நானூறாண்டுகளுக்குள்ளிருந்த நாடகமஹாகவியான ஜெகப்பிரியரின் (Shakespeare) ஜீவிதக்குறிப் புக்களைப்பற்றியும் அவர்பெயரான் வழங்கிவரும் நாடகங்களின் ஆசிரியத்துவத்தைப்பற்றியும் இன்னும் தீராத வாதப்போர் நிகழக் காணும் நாம், சரித்திரக்குறிப்புக்களில் ஆர்வமும் ஆதரவும் இல்லாத நமது நாட்டில் ஞாபகத்திற்கெட்டாத நீண்ட பலநூற்றாண்டுகளுக்கு முன் எழுந்துலவி மறைந்த பெரும்புலமை யருஞ்சுடரார் பிறங்கு மவர் நூற்கிரணவொளியால் நிலைப்பதல்லால், அவரைப்பற்றிய பிற சிறு குறிப்புக்கள் தமிழகத்திற் பேணப்படாமை கண்டு வியத்தற்கில்லை. உலகையும் அதன் நிலையற்றவாழ்வையும் வெறுக்கும் நம்மவர், மக்களின் குலம் குடி நிலைகளை மதிப்பதில்லை. இறவா அறிவறநூல்களைமட்டும் பேணிப்போற்றுவாரன்றி, அந் நூல்செய்தார்வாழ்க்கைக்குறிப்புக்களை நம்மவர் பாராட்டும்வழக்கம் இல்லை. இதனால், குறளாசிரியரின் குடிப் பிறப்பும் மற்றும் அவர் ஜீவிதக்குறிப்புக்களும் இன்று இனைத்தெனத் துணிந்து தெளிதற்குச் சான்று போதா.

எனினும், வள்ளுவர் புலைக்குலப்பிறப்பும் சால்புமுடையரெனக் கதைப்பவர் கதையொடுபொருந்தாக் குறிப்புக்கள் ஈண்டுச் சில நினைக்கத் தகும். பெற்றோர்ப்பேணலும் பெருங்குடிப்பெருமையும் குறணூலிற்

பெரிதும் பாராட்டப்படுகின்றன. நற்குடிப்பிறப்பும் பிறந்தகுடியைப் பேணிப்பெருக்கலும் மக்கட்கு அழகும் கடனுமாமென்று புலைக்குலவள்ளுவர் வற்புறுத்துவாரா? அன்றியும், அறம்பொருளின்பங்களையும் அவற்றின் நுட்பங்களையும் திறம்படவிரிக்கும் வள்ளுவர் ஆன்றகுடிப்பிறப்பும் அரசவைப்பழக்கமும் உடையரென்பதை அவர்குறள் பறையறைகின்றதே. இன்னும், அவரறநூல் வேதமனைய ஆரியர் பழம்பெருநூல்களின் வடித்தசாரமென முழங்குபவர், பறைக்குலவள்ளுவர், வாலப்பருவத்தே கல்விகேள்விகளால் நிறைந்து, இறவாக்குறள் பாடுமுன் தென்சொற்கடந்து வடசொற்கடலுக்கும் எல்லைகண்டது எப்படிக்கூடுமென்பரோ? அவர்காலப் புலையர் தமிழொடு ஆரியமும் பயின்று வருணபேதமழித்து அறவோர் அறிஞருடன் பயின்றுவந்தனர் என்று கொண்டாலன்றி, பறைக்குலவள்ளுவர் தம் திருக்குறள்காட்டும் அறிவும் கல்வியும் அடையுமாறில்லை. 'கல்லாமலும் கற்கவேண்டாமலும் அறம்பாட வந்த மனிதவுருவெடுத்த கடவுள் வள்ளுவர்' என்பார்க்கு இவ்வாராய்ச்சி அவசியமில்லை. சால்பும் தூய்மையுமானதெய்வத்தன்மை எனைத்துடையராயினும் நாயனார் மனிதவருக்கத்தினர் எனக்கொள்வோருக்குமட்டும் இனைய ஆராய்ச்சிகள் பொருளொடு பயனுடைத்தாம். ஆனால், தேவரைப் பிரமனவதாரமென்பார்மாட்டு நாம் கேட்டறியவேண்டுவதொன்றுண்டு. அறம்பாட அவதரிக்குங் கடவுள், ஓதுவிக்கும் அந்தணராகாமலும், முறைசெய்யும்அரசனாகாமலும், பறையறையும் வள்ளுவனாய்ப் பிறக்க வந்த நோக்கமென்னே? அநாதிதர்மமெனும் சநாதனமுறைகளையும் வருணவகுப்புவரையறைகளையும் நிலைதடுமாற அழித்தொழித்து, 'எல்லாவுயிர்க்கும் பிறப்பொக்கும்' எனும் உண்மையை நிலைநிறுத்தற்கென்றே மறையவர்பிரமன் பறையனாயினனோ? அன்றிப் பயன்தான் பிறிதுயாதோ? நாள்வழக்கில் நம்மவருட் புலைக்குடிமக்கள் கல்விப்பயிற்சி கேள்வியறிவு அறவோர்கூட்டுறவுகளுக்கு இடம்பெற நாம் காண்பதில்லை. திருக்குறளியற்றற் கின்றியமையாத மதிநுட்பமும் நூலறிவும் அந்நூலாசிரியர் பறையர்குலத்திடையே பெற்றிருக்கவொண்ணாதென்பதொருதலை. பழங்காலத்தே பறைச்சிறுவனைப் பார்ப்பனரெவரும் பாராட்டி வளர்த்துத் தமிழொடாரியமும் பயிற்றுவித்து அறமுதனூலாசிரியனாக்குவதும் அசம்பாவிதம். ஆகவே வள்ளுவர் இப்பெற்றியெல்லாம் பெறற் கின்றியமையாத நற்குடிப்பிறப்பும் அறவோர் கூட்டுறவும் உடையராதல்வேண்டுவது அவசியமன்றோ?

மேலும் புலைமைக்கறிகுறி இழிதகவுடைய புலாலுண்ணலும் களிமயக்குமேயாம். அக்குடிப்பிறந்த வள்ளுவர், தம்மவர்க்குக் குலதர்மமும், பார்ப்பாரனைய பிறர்க்கு ஆபத்விர்த்தியும், வேள்வி ஆராதனைகளுக் கவசியமுமான புலாலையும் கள்ளையும், விலக்கின்றி, யாவர்க்கும் விதிமுகத் தாற் கடிந்தொதுக்குவது, அவர் புலைக்குடிப்பிறப்பொடு பொருந்துவ தாமா? இன்னும், கேவலம் கல்விகேள்விகளால்மட்டும் அறியொணாதனவும், நீண்ட நெருங்கிய பழக்கத்தால்மட்டும் தெரியவேண்டுவனவுமான அரசர் அமைச்சர் அறவோர் அறிஞர் வணிகர் வேளாளரின் குடிக்குல வழக்கங்களையும் கூட்டுறவுநலங்களையும் நுணுகியாய்ந்து எடுத்துத் திரட்டித் தெருட்டும் திருக்குறள் அதனை ஆக்கியவர் நற்குடிப்பிறப்பும் மேன்மக்களின் நெருக்கமும் உடையாராதலைச் சுட்டாதொழியாது.

இதுவேயுமன்றி, வள்ளுவரைப் புலையராக்கும் கதையே அவருக்கு வேளாளமாயில் வாசுகியெனும் ஒரு மறுவில்கற்புடைமங்கையை மணஞ் செய்வித்து வழுத்துகின்றது. உயர்குடிப்பிறந்த வாசுகியென்பாள் வள்ளுவரின் வாழ்க்கைத்துணையாவதற்கு, அவர் புலைக்குடிப்பிறப்பு ஆசாரச்சீர்திருத்தம் அறியாத பண்டைக்காலத்தி லிடந்தருமா? வள்ளுவரும் வாசுகியும் 'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபடினும்', அவள் பெற்றோரும் உற்றோரும் சைவவேளாளமாபொழுக்கங்களை மறந்து வள்ளுவரை மணமகனாகக்கொள்ளற் கிசைவாரா? திணைமயக்கும் குலக்கலப்புமான இம்மணம் அசம்பாவிதமாமேல், அதைக்கூறுங் கதையில் வள்ளுவரின் புலைக்குலப்பிறப்புமட்டும் அங்கீகரிக்கப்படுமாறுண்டா? இனைய பலவற்றானும் வள்ளுவரின் புலைப்பிறப்பு அங்கீகரிக்கத்தக்கதில்லை என்று ஒருவாறு துணியலாகும்.

## 3. வள்ளுவச்சொல்லின் வழக்கும் பொருளும்.

இனி வள்ளுவப்பெயர் பறைக்குலத்தையே சுட்டுகின்றதா என்பதும் சிறிது ஆராயத்தக்கது. பறையரின் புரோகிதவகுப்பினரே வள்ளுவராவர்—என்பதற்குச் சூடாமணிநிகண்டும் பிற்காலப் பிறநூல்களும் மேற்கோள்களாகக் காட்டப்படுகின்றன. பண்டைநூலொன்றிலேனும் வள்ளுவப்பெயர் தீண்டாமலொதுக்கப்படும் புலையர்க்காமெனும் குறிப்பும் இல்லை. மணிமேகலையில் வள்ளுவனென்ற பெயரும் இல்லை. பெருங்கதை சிந்தாமணி முதலிய கடைச்சங்கத்துக்கு மிகப் பிற்பட்ட சில காப்

பிய நூல்களுள் பெருவிழாக்களையும் மன்னர் மணமனைய நற்செய்திகளையும் பட்டத்துயானைப்பிடர்த்தலையிருந்து அகநகரில் அரசவீதிகளிற் றெரிவிப்போர் வள்ளுவரெனச் சுட்டப்படுவதுண்டு. ஆண்டும் ஆணைமேல் அணைமிசையமர்ந்து பெருவிழாக்களை அரசமுரசொலிக்க அறிவிக்கும் தொழிலுடையோரைச்சுட்டுதற்கன்றி, புலையர்குலவகுப்பினர் யார்க்கும் வள்ளுவப்பெயர் வழங்கவில்லை. "அணைமிசை யமர்தந் தஞ்சுவரு வேழத்துப், பணையெருத் தேற்றிப் பல்லவர் சூழ"* ஊரையும் தம்மையும் உலகையும் வாழ்த்தித் தம் மணம் முதலிய மங்கலவிழாக்களை அறிவிப்பதற்கு வேந்தர் புலையரைத் தேடிக் கொள்ளாரன்றே? மேலும், புறநானூற்றில் "துடி பாண் இழிம்பனொடு குடியாப்"பேசும் பறையரொடுவைத்துப் பிற்காலப் பெருங்கதையும் வள்ளுவமுதியரைச் சொல்லுமாறில்லை. நன்குடிமக்களின் பின்னடிக்குடியான பறையர்சாற்றும் பறையும், அதை அறைவாரையும் முறையும் வேறு. "அரசுகொற்றத் தருங்கடம் பூண்ட" வள்ளுவரோ, "கோற்றொழில் வேந்தர் கொற்ற முரசம், பெரும்பணைக் கொட்டிலுள் அரும்பலி போக்கி, முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சித், திருநாள் படைநாள் கடிநாளென்றிப், பெருநாட் கல்லது பிறநாட் கறையார்" எனப் பெருங்கதை† பேசுகின்றது. பெருங்கதையுட் போலவே, சாத்தனார் தம் மணிமேகலையிலும்,—

"வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசங்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
முரசுகடிப் பிடூஉ முதுக்குடிப் பிறந்தோன்
திருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
ஒளிறுவாள் மறவரும் தேரும் மாவும்
களிறும் சூழ்தரக் கண்முர சியம்பி

*பெருங்கதை, காண்டம்-2. பகுதி 2. வரி-37-39.
†காண்டம் 2, பகுதி-2, வரி 29—33.

லையடிகள் நூல்நி

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென"

(விழாவறைகாதை—வரி-27, 28; 31, 32; 68-72.)

என்று கூறியுள்ளார்.

இதில், தமிழ்முடியரசு சிமிழ்கடிமுரசை அரணுடையவர்கோயில்களில் வச்சிரக்கோட்டத்தினின்றெடுத்து யானைப்பிடர்த்தலையேற்றி அரசனையும் அனைவரையும் வாழ்த்திப் புகார் அகநகரிற் கரிகாற்சோழன் கட்டளையாற் கால்கோள் விழவின் கடைநிலை சாற்றினவனை 'முதுக்குடிப் பிறந்தவனுக'வே சுட்டியுள்ளார். கொங்குவேளிரும் சாத்தனாரும், அரசன்கோட்டத்துக் கொட்டிலுள் முரசத்தேவைப் பலியோச்சிப் பழிச்சி விழவுணர்த்த யானையெருத்தத் தேற்றுவதைக் கூறுவதுபோலவே, பாலைக் கௌதமனாரும், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் வண்மைவளமுழங்கும் தம் பாட்டில், 'முரசுறைகடவுளை' இரும்பலியூட்டிப் பாசியேந்துபவனை 'உயர்ந்தோன்' என விதந்து கூறுவதும்* கவனிக்கத்தக்கது. இவ்வாறு "வேந்தன்.......பெரும்பணைக்கொட்டி" லுள்ளும் வச்சிரக்கோட்டத்துள்ளும் புலைப்பறையர்சென்று அரும்பலி ஓச்சுவாரா? அன்றியும், கழுத்திலிட்டறைந்து காலானடந்து கரையும் பறையரின் பறை வேறு; வள்ளுவமுதுமகன் அரசவேழத்தணையிசையமர்ந்து மன்னர்மங்கலப்பெருநாள் வழுத்தும் 'கோதைமுத்தொடு தாமம் தழைஇய' வேந்தர் கொற்றமுரசமும் வேறன்றோ?

மேலும், ஆஸ்தானமண்டபத்திற் கொலுவிருந்தபடியே, "அரசு கொற்றத் தருங்கடம் பூண்ட—முரசெறி வள்ளுவ முதியனைத் தரீஇ"† அரசரே நேரில் அவனுக்கு ஊருக்குரைப்பனகூறுகின்றதனாலும், வேந்தர் வெற்றிமுரசைப் பலிதந்து பாசி 'அரசுவருவேழத்துப் பணையெருத்தேற்றி" 'மறவருந் தேரும் மாவுங் களிறுஞ் சூழ்தர' உலகை அரசொடு வாழ்த்தி அணிவிழவறையும் வள்ளுவனை 'அரசுகொற்றத்தருங்கடம் பூண்ட'வனையும் முதுக்குடிப் பிறந்தோனையும் உயர்ந்தோனையும் பண்டைப் புலவர்கள் பாராட்டுவதாலும், அரசனுக் கருங்கடம்பூண்டோர

*பதிற்றுப்பத்து—30.

†பெருங்கதை காண்டம் 1. பகுதி 47, வரி 155-156.

ருத்தியோகம் உடையனே அவ்வள்ளுவனாகவேண்டுமென ஊகித்துணரக் கிடக்கின்றது.

இனி இதன் தொடர்பாகச் சேந்தனார் திவாகரத்தில் "வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னர்க், குள்படு கருமத் தலைவர்க் கொன்றும்" என்று விசதமாக விளக்கியுள்ளமையும் ஈண்டுக் கவனிக்கற்பாற்று. இதனாலும் மன்னர்தம் உள்படுகருமத்தலைவர்க்கு வள்ளுவரென்பது உத்தியோகப்பெயராதல் தெள்ளிதிற் றெளியக்கிடக்கின்றது. தற்காலத்திலும் அரசனனைய பெருமக்களுக்கு அன்பும் நம்பிக்கையுமுடைய ஆப்தர் உட்கருமத்தலைவர் (Private Secretaries) ஆக அமரக் காண்கின்றோம். எனவே, பண்டைக்காலத்திலும் தமிழரசர் தம்மகத்தே, புறக்கருமத்தலைவரான ஏனாதியரொத்த வரிசையும் பதவியுமுடைய அகக்கருமத்தலைவரான உத்தியோகஸ்தர் இருந்தனரெனவும், அவர் வள்ளுவரெனவழங்கப் பெற்றாரெனவும் தெளிகின்றோம். கடைச்சங்கத்துக்கு முற்பட்ட குறளாசிரியர்பழங்காலத்தில் வள்ளுவப்பெயர் சாதிகுறியாமல் மன்னருள்படுகருமத்தலைமைப்பதவியையே குறித்ததாக ஏற்படுகின்றது. எனவே, வள்ளுவப்பெயர் சங்ககாலத்திற் றமிழரசர் உள்படுகருமத் தலைமையுத்தியோகப்பெயராயும் (Chamberlains), பெருங்கதையும் சிந்தாமணியும் எழுந்த இடைக்காலத்தே அவ்வுத்தியோகஸ்தரின் தொழிலிலொன்றான அரசவிழாக்களை அறிவிப்போர் (Heralds) பெயராயும் நின்று, பிற்காலத்திற் பறையருக்குப் புரோகிதரும் நிமித்திகருமான ஒரு புலைவகுப்பினரின் சாதிப்பெயராய் வழங்கலாயிற்றெனத் தெரிகின்றோம். இப்படியே முன் ஜாதிகுறியாத குறிஞ்சித்திணைமக்கள் பொதுப்பெயராய்நின்ற 'குறவர்' எனுஞ்சொல் தற்காலத்திற் குறிசொல்லும் ஒரு பஞ்சமவகுப்பினரின் சாதிப்பெயராய்வழங்குவது அறிவோம். இவ்வுண்மையறியும் நாம், இக்காலத் தொருவனை வள்ளுவனெனில் வள்ளுவச்சாதியிற்பிறந்தவனைக் குறிப்பதெனக்கொள்ளு முறைமை கொண்டு, இப்பாற் சாதிகுறியாத முன்சங்கத்தமிழுலகில் வள்ளுவரெனுஞ்சொல் பதவி-தொழில் குறியாது சாதிகுறிப்பதெனத் துணிதல் முறையாமா? வள்ளுவரென்று ஒருசாதிவகுப்பே தொல்லைத்தமிழகத்திலிருந்ததாய் அறிந்தபாடில்லை. பழம் பனுவல்களில் வள்ளுவப்பெயர் அரசரகம்படுகருமத்ததிபரையே சுட்டக் காண்கின்றோம். அதனால், அப் பெரும்பழங்காலத்துக் குறளாசிரியர் வள்ளுவரென்று வழங்கப்பெறு

வது கொண்டு—அவரைத் தற்கால வள்ளுவச்சாதிவகுப்பில் தள்ளிவிட யார்க்கும் உரிமையில்லை. அப்பெயரால் நாம் கொள்ளற்குரியது, அவ்வாசிரியர் அவர்காலத் தமிழரசன் ஒருவன்பால் 'உள்படுகருமத்தலைவ'ராக அமர்ந்தவராதல்வேண்டுமென்பதே. பிரித்தானியா (Britain)வில் பேரமைச்சனாயிருந்த பேகன் (Bacon) பெருநூலெழுதியபின்னர் அவனமைச்சனாயிருந்தவரலாறுமுழுதும் மறந்து அவனை அறிஞர்கூட்டத்தில் வைத்தெண்ணப்படுவதனையே பெரும்பாலோர் அறிவர். சாணக்கியரை அவர்பெயரால் நின்றுநிலவும் நூலாசிரியரென அனைவரும், சந்திரகுப்தன்மந்திரி என்று அவரை வெகுசிலருமே கூறக் காண்பாம். இம்முறையில் நம் முதற்பாவலரும் அரசன் அகக்கருமத்தலைமைவகித்து வள்ளுவப்பதவியும் பட்டமும் பெற்று அவ்வுபசாரப்பெயரான் அழைக்கப்பட்டிருந்து, பின் அவர் தம் இறவாக் குறணூலை இயற்றிப் புகழ்சிறந்ததனால், கேவலம் உத்தியோகப்பதவியைப் பாராட்டி அவருக்குப் பெருமை கூறக்காரணமில்லாது அப்பெயர்ப்பொருளை மறந்த மக்களின் நெடுவழக்கால் வள்ளுவப்பெயர் அவர்க்கு இயற்பெயராகநின்றுநிலவிவரவாய்த்தது போலும்.

மேலும், வள்ளுவப்பெயர்-சங்ககாலத் தமிழகத்திற் பறையரினொரு வகுப்புக்கும் சாதிப்பெயராகாமல், தகவுடைய முடிமன்னர்மகட்கொடைக்குரிய வேளிர்-குறுநிலவேந்தரிடை வழங்கிவந்த செய்தியும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. கடைச்சங்கக்காலத்துக்குமுந்தியபுலவர்சிலரின் முதுசுவைப்பாக்களையுங் கொண்டுளதாகக் கருதப்பெறும் புறப்பாட்டில், ஒருசிறைப்பெரியனார், மருதனிளநாகனார், கருவூர்க் கதப்பிள்ளை எனும் பண்டைப் பாவாணர் பாடிய வேளிர்குலதிலகனும் நாஞ்சிற் குரிசிலின்பெயர் "வள்ளுவன்" எனச் சுட்டப்படுகிறது. இஃது தலைவனியற்பெயராதலொன்று; அன்றேல், அவன் சேரன்மாட்டன்புடையனாய் அவனுக்குப் படைத்துணைநின்றதாயறிகின்றோமாகையால், அக் குடச்சேர அரசனொற்றுத் தருங்கடம்பூண்ட உள்படுகருமத்தலைவனாயிருந்த பதவியாலெய்திய பட்டப்பெயராதலொன்றாம். எதுவேயாயினும், வேளாண்மரபிற் குறுநிலவேந்தனுக்கு "வள்ளுவன்" எனும் பெயர் புறப்பாட்டில் வழங்குவதாலும், சங்கநூல்களில் அது புலைக்குலச்சாதிப்பெயராக யாண்டும் பயிலாமையாலும், வள்ளுவப்பெயர் மன்னருள்படு

கருமத்தலைவர்க் கொன்றுமென்றே சேந்தனார் திவாகரத்திற் செப்புவதாலும், அப்பெயருடைமைகொண்டு அறப்பழங்காலக் குறளறநூலுடையாரைப் பறைக்குலத்தவராகக் கருதல் முறையன்றாம்.

இன்ன பலகாரணங்களாற் பொய்யில்புலவருக்கு "வள்ளுவர்" எனும் பெயர் இயற்பெயராகாமல், பதவியும் தொழிலும் உதவவந்தொன்றிநின்றதொரு சிறப்புப்பெயராகுமென்றுநினைப்பது இழுக்கன்றாம். அன்றி, இயற்பெயரெனவே இயம்பினும் இசையும். "சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவிக்கும், இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" எனுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில்—யாருக்கும் காரணச்சிறப்புப் பெயரை முற்கூறி அவர் இயற்பெயரைப் பிற்படவழங்குவதே தமிழ்மரபென்பதை வலியுறுத்துவதற்கு, சேனாவரையர் நச்சினார்க்கினியர் இருவரும் "முனிவன் அகத்தியன்"—"சோழன் வங்கிள்ளி"—என்பவரோடு 'தெய்வப்புலவன் திருவள்ளுவன்' என்றதனையும் உதாரணமாக உடனெடுத்துக்காட்டிய செய்தியைச் சிந்திப்பின், 'முனிவன்' 'சோழன்' 'தெய்வப்புலவன்' எனச் சிறப்பினாகிய பெயர்நிலைக்கிளவிகளுக்குப் பிற்படக் கிளக்கப்படும் 'அகத்தியன்' 'வங்கிள்ளி' என்பனபோலவே—திருவள்ளுவனென்பதும் நாயனாருக்கு இயற்பெயராமென்பது அவ்விருபேராசிரியருக்கும் ஒப்பமுடிந்தகருத்தெனத் தெளியலாகும். இவ்வாறு இவர்க்கு இஃது இயற்பெயரென்பாரோடு எமக்கு வாதமில்லை; ஏனெனில், இயற்பெயரென்போர் அப்பெயர்கொண்டு வள்ளுவரைப் புலைக்குலம் புகுத்திப் பிழையார். வள்ளுவப்பெயர்காரணமாகத் தெய்வப்புலவரைப் புலைக்குலத்தவராக்கவிரும்புபவருடன்மட்டுமே ஈண்டு வாதமாதலானும், இயற்பெயராக்கொள்ளல் அவ்விருப்புடையோர் வழக்குக்கு உதவாமையானும், காரணச்சிறப்புப்பெயராய் எழுந்து பின் இயற்பெயராய்நிலைத்ததெனக்கொள்ளுவார்க்குமட்டும் அப்பெயர்நிலைக்கிளவி சாதிகுறியாது "வேத்தகவினைமை"யே குறிப்பதெனக் காட்டியமைவேம்.

இனி வள்ளுவப்பெயர் தொழிலையே குறிக்குமாயின், குறளாசிரியரும் குறளுமே அப்பெயரான் வழங்கப்பெறுவது வழக்காறுமா?—என்பார்க்குக் கூறுவம். சால்பும் தகவுமுடைய பெரியாரை அவரியற்பெயராலழைத்தல் தமிழகத்தில் மரபன்று—என்பது யாவரும் அறிந்ததொன்றாம். தற்காலத்திலும் மகாவித்வான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை

யைப் பிள்ளையவர்களென்றும், நல்லூர் ஆறுமுகநாவலரை நாவலரவர்களென்றும், இன்னும் இப்படியே ஆங்காங்கு அவ்விடத்துப் பெரியோர் சிலரைக் கலைக்டரவர்கள் திவானவர்களென்றுமே நம்மவர் சொல்லுவதை யாவரும் அறிவோம். பண்டைக்காலத்திலும் உவாத்திமைத்தொழிலுடைய கணக்காயர் பலரெனினும் அவருட் சிறந்த நக்கீரர் தந்தையை மதுரைக்கணக்காயரெனவும், சிந்தாமணி ஆசிரியரைத் தேவரெனவும், இளங்கோவை அடிகளெனவும் தொல்காப்பியத்திற்கு முதலுரைகண்ட பெரியாரைப் பேராசிரியர், உரையாசிரியர் எனவுமே அவரவர் தொழில் பதவிகளாலும், தொல்காப்பியர் முதலிய பழம்புலவர்பலரைக் கேவலம் அவரவர் குடிப்பெயராலும் மட்டும் அழைக்கும் வழக்குண்மை அறியாதாரில்லை. கம்பர் என்பதும் அப்புலவர்பெருமானின் நாட்டினடிப் பிறந்ததொரு சிறப்புரிப் பெயராவதன்றி அவரியற்பெயராகாமை கம்பநாடர், கம்பநாட்டாழ்வார் என்ற பெருவழக்குக்களால் விசதமாகும். இப்பெரியோர் எல்லோர்க்கும் இயற்பெயரொன்றில்லையெனச் சொல்லலாமா? இப்போது அவ்வியற்பெயர்களொன்றேனும் அறியகில்லேம். பெரியார்பெயர் வழங்கின்மை மரபன்றே இவ்வாறு இன்னவர்தம் இயற்பெயரை மறப்பித்துப் புதுப்பெயர்கள் புனைந்து இவர்க்குச் சூட்டிற்றாகும். எனவே பெரியோர்களியற்பெயர்கள் வழங்காமையும், அவரை அவர்தம் சிறப்புரிமைப்பெயரானே அழைப்பதுமே தமிழகத்தில் தொன்றுதொட்டு நின்றுவரும் மரபென்றே அறியலாகும். ஆகவே, தாமே தம் தகுதியாலாவது தம் முன்னோர் வான்முறையுரிமையாலாவது தமிழ்முடிமன்னரிடம் அவருள்படுகருமத்தலைமைவகித்து, வள்ளுவப் பதவிப்பெயர் வழங்கப்பெற்று, அக்கால வள்ளுவ உத்தியோகம் வகித்த மற்றையோரினும் அறிவு திரு ஆற்றல்களிற் சிறப்பெய்திய காரணத்தால் நமது நாயனார் வள்ளுவரெனும் உத்தியோக உபசாரத் தனிப்பெயரா லழைக்கப்பட்டிருக்கவேண்டுமெனவும், பிறகு அவர் திருக்குறளியற்றிப் பெரும்புகழெய்தப்பெற்று—நாளடைவில் ஆட்சியின்மையால் அவரியற் பெயர் அறவே மறக்கப்பட்டு அவருக்குத் திருவள்ளுவப்பெயர்மட்டும் நிலைநின்று வழக்காற்றில்வந்திருக்கவேண்டுமெனவும் ஈண்டு நாமறியலாகும்.

## 4. வள்ளுவர் வாழ்ந்த இடம்.

இனித் திருவள்ளுவர் மயிலாப்பூர்வாசியென்பதும், அவரைப் புலையாகப் பாவிக்கும் அடியற்றகதையையே ஆதாரமாகவுடைத்து. சங்கநூல்களில் மயிலாப்பூர் எனும் பெயரே எங்கும் வழங்கக்காணோம். சங்ககாலத்தில் அவ்வூரிருந்ததற்கு வேறு தக்க சான்று காணப்படவுமில்லை. பிற்காலச் சைவசமயகுரவர் தம் தேவாரத் திருமயிலைப்பதிகப் பாக்களில் மயிலாப்பூருக்கு வள்ளுவர்சார்புடைமை சுட்டவுமில்லை. இக்கதை அவர்காலத்து வழங்கியிருப்பின், சைவப்பெரியார் திருமயிலாப்பூரைத் திருவள்ளுவர்தொடர்பாற் சிறப்பியாது வெறுக்கவும் மறக்கவும் நியாயமில்லை. சங்கத்தாராற் பாடப்பெறாவிடினும் நீண்ட காலமாய் அப்பெரியார்பெயரால் வழங்கிவரும் மீட்சியான ஆட்சியுடைய திருவள்ளுவமாலையுட் செய்யுளொன்று, "பொய்யில்புலவனை" மயிலாப்பூருக்குரியராக்காமல் மதுரைக்குரியராகப் பேசுகின்றதும் ஈண்டுக் கவனிக்கத்தக்கது. அக்கவி வருமாறு:—

"உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு. (21)

நாம் கேட்கும் கதை—'அவர் மயிலாப்பூரிலே பிறந்து அவ்வூரிலேயே வளர்ந்து மணந்து வாழ்ந்து முத்தியடைந்தவர்'—எனக் கூறுகின்றது. கடைச்சங்கத்தாரை வென்றடக்குவதற்காகமட்டும் மதுரைக்கு ஒருமுறை வந்ததாயும், வந்து தம் இறவாக்குறணூலை அரங்கேற்றிய காலை அவமதித்த தருக்குடைய சங்கத்தார் செருக்குடையத் தாமும், சத்தியலோகத்தில் மனைவியும் தரணியில் தம் தமக்கையுமாய்த் தம்மொடு புலைச்சி ஆதியின்வயிற்றில் அவதரித்திருந்த கலைமகள் ஔவையும், தம் வைகுண்டத்தந்தை வையத்திற் புலைத்தலைமையனுயிருந்த இடைக்காடருமாகத் தந் தெய்விகத்தன்மையாற் றமிழ்ப்புலம் புணர் கூட்டுண்ட புலவரைக் கோயிற்குளத்திற் குப்புறவீழ்த்தி வென்ற பின்னர் மதுரைவிட்டு மயிலாப்பூருக்கு இவர் மீளச் சென்றுவிட்டதாயும், இக்கதை பேசுகிறது. • இஃது உண்மையாயின் வள்ளுவர் மயிலாப்பூருக்கே உரிய புலவரும், மதுரைக்கு ஒருமுறை வந்து மீண்டதன்றி

மற்றைய தொடர்புச்சிறப்பற்றவருமாவர். இக்கதையே 'இவரால் வெல்லப்பட்ட சங்கத்தார் தாமரைக்குளத்திற் றள்ளப்பட்டுத் தத்தளித்த தருவாயிற் பாடியது திருவள்ளுவமாலை' யெனவும் வற்புறுத்துகிறது. எனவே, சங்கத்தாருக்கு நாயனார் மதுரைக்குத் தம்மொடு வாதிடவந்த ஏதிலரென்பது தெரிந்திருக்கவேண்டும். அஃதறிந்த சங்கத்தார், தம் வள்ளுவமாலைச் செய்யுளிலேயே, இவரைப் "புனழ்கூடற்கச்சு" என மதுரைக்கே இவர் சிறப்புரிமைகூறுவது கதைப்பவர்கற்பனைத்திறத்தை விளக்குதற் குதவும்.

கதை கிடக்க; இவ்வள்ளுவமாலைச்செய்யுள் நம் முதற்பாவலரை வளம்படுகூடலான தென்மதுரைக்கு அச்சாணிபோன்றவரென விதந்து கூறுவதால், மதுரைக்கு ஒருமுறை வாதிடவந்து மீண்டாரெனுங் கதைக்கு மாறாக, நாயனார் மதுரைக்கு விசேடநெருக்கமும் தொடர்புமுடையாராகவேண்டுமெனத் தோன்றுகிறது. சங்கத்தைத் தாழ்த்த வந்து, வென்றதும் மீண்டுசென்ற வள்ளுவரை—நல்கூர்வேள்வியார் 'மதுரைக்கச்சு' என வழுத்துவதன் நயனும் பயனும் என்னே? இச்செய்யுளால் அஃதியற்றப்பெற்ற பழங்காலத்தில் வள்ளுவர் கூடலிற் பீடுபெற வாழ்ந்த பெரியாரெனும் வழக்குண்மை வலிபெறுகின்றது. இதனாலும் இக்கதையின் கற்பின்மை தெளியப்படும். இதனால் தமிழெழுந்தநாளெழுந்த பழம்பழைய பாண்டியரின்மூதூரில் தமிழிசைத் துப்புகழ்சிறந்த கடைச்சங்கத்தாரும் பரசும் நெடும்பழைய முதற்பாவலராய் அறம்பாடி அளிசெய்த தெள்ளியரே வள்ளுவரென்றறியலாகும். எனவே, தென்மதுரைப் பெரியாரை வடமயிலைக்குரியரென வழுத்து கதைப்பொய்ம்மை யினி விரிக்கவேண்டா.

## 5 வள்ளுவப்பெரியரின் இல்லறக்கிழவியார்.

இன்னும், இவ்வெண்பாவை உற்றுநோக்கின் இவர்மனைமாண்ட வாழ்க்கைத்துணைவியின்பெயரும் ஒருகால் ஊகித்தறிதற் கிடம்பெறலாமென்று எண்ணக் கிடக்கின்றது. முன்னிரண்டடிகளில் தமிழில் வடமதுரை என வழங்கப்பெறும் மதுராபுரிக்குக் கண்ணன் அச்சாணி நின்றவிவரம் விளக்கப்படுகிறது. சரவணப்பெருமாளையரவர்கள் இவ்வடிகளுக்குப் 'பார்வதியைமணக்க சிவபிரான் வடமதுரையிலிருந்து

சிறந்தபடி' என்றுரைத்து இடர்ப்படுவேதறிவேம். இடைக்காடர் பிணக்குத்தீர்க்கப் பெருமான் தமதாலயம் தவிர்த்து அதன்வடக்கே வைகையின் தென்கரையில் மதுரையின் வடபாக்கத்திலேயே கோயில் கொண்டிருந்ததாகமட்டும் விளையாடற்புராணம் உரைக்கின்றது. மதுரைக்கும் வையைக்கும் வடக்கே வடமதுரை என்றதோர் பிறிதூரிற் கடவுள் சென்றிருந்தகதை யாண்டுங் கேட்டிலேம். மேலும் திருமாலுக்குக் கேசியெனும் பெயரின்மையால், உபகேசி, யென்பது உமையவள் பெயராமாறில்லை. நீலகேசி, பிங்கலகேசி என்பனபோல உபகேசி எனும் பெயர் நப்பின்னையையே குறிப்பதாம். இதனை விசதமாக ஸேதுஸமஸ்தானமுதற்பாவலரான பிரும்மஸ்ரீ ரா. இராகவையங்காரவர்களும், காலஞ்சென்ற ஈழத்துப்பண்டிதர் ஸ்ரீ. அ. குமாரசுவாமிப் புலவரவர்களும் செந்தமிழ் முதற்பகுதியில் இனிது விளக்கியுள்ளார்களாகையால் ஈண்டு விரித்தல் வேண்டா. இனி,—

"மாயனை மன்னு வடமதுரைமைந்தனைத்
தூயபெருநீர் யமுனைத் துறைவனை" [திருப்பாவை **5**.]

"மதுரையார் மன்னன் அடிநிலைதொட் டெங்கு
மதிரப்புகுதக் கனக்கண்டேன்" (நாச்சியார்திருமொழி 6–5.)

"வாசமலர்ப்பொழில்சூழ் வடமாமதுரைப்பிறந்தான்"
(பெரியதிருமொழி–9-9-6)

"வடமதுரைப்பிறந்தாற்கு" (திருவாய்மொழி–9-1-3)

"மதுவார்சோலை யுத்தர மதுரைப் பிறந்த மாயனே" (ஷ 8-5-9)

என்னும் பல பழம்பிரயோகங்களாற் கண்ணன்மதுராபுரியைத் தமிழில் "மதுரை" எனவும், கூடற்றென்மதுரையினின்று பிரித்து "வடமதுரை" எனவும் வழங்குவ தறிவோம். இதனானும், வள்ளுவமாலைச்செய்யுள்பிறவும் இப்படியே தேவரைத் திருமாலுக்கு உவமித்துச் செல்லுவதானும், "ஏர்ப்பின்னை தோண்முன் மணந்தான்" எனக் கண்ணனைத் திருக்கோவையிற் குறிப்பதானும், உத்தரமாமதுரைக்கு அச்சாகி உபகேசிதோண்மணந்தவன்–கண்ணனேயாமெனத் துணியப்படும். அன்றியும், இவ்வெண்பாவைச் சொல்லி "இதனுள் உபகேசியார் நப்பின்னைப்பிராட்டியார்" என பரிமேலழகிருந்திகார் கூறினவுத்

துள்ளமையானும், இவ்வடிகட்கு இப்பொருளின் இயைபுடைமை வலிபெறுவதாகும். இன்னும், மேற்செய்யுளிற் "பின்னையை மணந்த கண்ணன் வடமதுரைக்கு அச்சாணியானாற்போல், வையைவளந்தரு தென்மதுரைக்குத் தமிழ்ப்பெருநாவலர் அச்சாகிநிற்பர்"-என நல்கூர் வேள்வியார் பாராட்டிப்பாடியுள்ளார். இதிற் கீதைபாடிய கண்ணனால் வடமதுரை சிறந்தவாறு, குறளால் அறம்பாடிய வள்ளுவரால் தென் மதுரை சிறந்ததென, உவமான உபமேயப் பொருத்தமும் விசதமாகிறது. இவ்வளவு பொருத்தமுடனியங்கும் இப்பாவிற் குறளும் கீதையும் உறழும் நயந்தெரித்த புலவர்—வானா "உபதேசித்தாண்மணந்தாக்" என உவமானத்தில் அடைகொடுத்து உவமேயத்தில் அதற்கு ஒப்புமை குறியாமல் – உவமையடை பொருளில்சொற்றொடராகநிற்கவைத்திருப்பரென்பதினும், அவ்வடைக்கேற்ப உவமேயத்திற் குறளாசிரியர்க்கும் விசேடணஞ்சொல்லியிருப்பரெனக்கொள்ளுதல் இழுக்காதன்றே? மூன்றமடியில் 'மறுவில்' என்பது 'மருவு' என்பதன் திரிபாடமாகக்கொள்ளிற் செய்யுளிற் சொல்லிசையும் பொருணயமும் சிறப்பதுடன், முற்றுவமை முழுநலமும் பெறுவதாகும். இனி 'மறுவில்' என்பதன் இரண்டாம் வல்லெழுத்தை மாற்றி மருவில் என இடையெழுத்தாக்கி நிறுத்தினும் இழுக்காது. உண்மையானபாடம் இது வெனத் துணிதற் கில்லை. எதுவாயினும், "பின்னையைமணந்து கீதைபாடிய கண்ணன் வடமதுரைக்கு அச்சாவதுபோலவே மாதானுபங்கியைமருவிக் குறளால் பாடி உலகுய்ய உதவிய பெருநாவலர் தென்மதுரைக்கு அச்சாவர்" எனக் கொள்ளுவது பொருத்தம் மிகவுடைத்தென்பதில் ஐயமில்லை. மாதானுபங்கியென்பதைத் தேவர்பெயராக்குவதினும்—மனைமாண்டு ஆவர் அறமனையாளின்பெயராக்குவது மிகப் பொருந்தும். அன்னபோலொழுகுபவர் என வலிந்துபொருள்கொண்டு நாயனாருக்காக்கவேண்டுமிப் பெயரில், அப் பொருள்கொள்ளுமாறில்லையென ஸ்ரீ அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் முன்னமே செந்தமிழில் விளக்கியுள்ளார்கள். மாதம் = மதம் + பங்கி = கெடுத்தவன் எனப்பிரித்து, "சுபகர்வத்தைப்பங்கஞ்செய் தடக்கியவர்" என்னும் பொருளுடையதாக்கி, வள்ளுவருக்கு இப்பெயர் கொள்ளுவதும் சிறப்பும் செவ்வியும் உடையதில்லை. வேதங்களுக்குப் பின் பாவலர் யாவருக்கும் முன் முதற்கவியாவாரான வான்மீகியாரை 'ஆதிகவி' என வடமொழியாளர் காரணச்சிறப்பியற்பெயரால் வழங்கு

வதுபோலவே, தமிழகத்திற் பழம்பண்டைப் பெருநாவலரான வள்ளுவரை "முதற்பாவலரென" வழங்கிவருதல் பொருத்தமும் சிறப்பும் உடைத்தாம். அத்தொல்லைநல்லாசிரியருக்கு இடர்ப்பட்டமைவதாகும் வடமொழிப்பெயர்களைச் சூட்டுவதில் நயனும் பயனும் இல்லை. அன்றியும் பொருளொடுசிறந்த பயனுடைமொழிகளால் யாப்புறவுற்ற மேற்கவியில் திருவள்ளுவர்க்குமட்டும் இரு வெறும்பெயர் பெய்துவைத்து, உவமான உவமேய விசேடணங்களுக்கு இயைபுகுன்றும்படி நல்கூர் வேள்வியார் செய்யுள்செய்திருக்கமாட்டாரன்றே, 'மாதாநுபங்கி' என்பது தேவர்திருத்தேவியாருக்கு இயற்பெயராயினும் — அன்றிச் சிறப்புப்பெயராயினும் ஆகுக. அத்திரிமுனிவரின்மனைவி அனசூயை போல அறவோரும் அறிவருமான குறளாசிரியர்மனையறத்துணைவியாரும் அவர்காலத்தே அறந்தலைநின்று சிறந்த பெருந்தேவியாராகையால், அவ்வம்மையாரை மணந்துயர்ந்த தேவரின்பெருமை இவ்வினிய பழைய வெண்பாவிற் பாராட்டிப் பாடப்பெற்றுளது. வாசுகியென்பது அவரியற்பெயரென்பதற்கு நாம் கேட்டுவரும் அடிபற்ற கதையொழியப் பிறிது பிரமாணமில்லை. ஒருகால் அதுவே அவ்வம்மையாரின் பெயராமேனும், தேவரை வள்ளுவரெனும் இயற்பெயராற்சுட்டாது செந்நாப்போதார் எனும் அவர் சிறப்புப்பெயரால் இக்கவியிற் புகழும் புலவர், இவர் தேவியாரையும்—அவருக்கேற்ற சிறப்பியற்பெயர்கொண்டு 'மாதாநுபங்கி' எனப் புனைந்து பாராட்டுவதும் பொருத்தமேயாம்.

### ௬. வள்ளுவர் வணிகன் வளத்துணையால் வாழ்ந்த வரலாற்றுண்மை.

இனி மயிலாப்பூரில் தனவணிகர் ஏலேலசிங்கரின்வண்மைக்கு
ள்ளுவர் மிகவும் கடப்பட்டவரெனவும், இளமைதொட்டு எஞ்ஞான்றும்
லேலசிங்கரின் நட்புநலமும் ஈகைவளமும் துணைக்கொண்டு வள்ளுவர்
ம் மனையறம்வளர்த்து வாழ்ந்தனரெனவும் நாமறியும் நாடோடிக்கதை
ல்கின்றது. இது மேற்குறித்த வள்ளுவப்பெயர்வரலாற்றுண்மை
க்கத்தாற் பொய்படும். அன்றியும் இவ்வரலாறு வள்ளுவரை வணிகர்
பெறுவிக்கும் பெருநலத்தில் ஒருசிறிது சடையப்பரிடம்பெற்ற
ர் அவரையும், அவ்வாறே கூத்தர் காங்கேயமுதலியாரையும்,
ந்திப்புலவர் சந்திரன்சுவர்க்கியையும் அழிவிலா அமராக்கித்

தமது 'என்றுமுளதென்றமிழ்' நூல் நின்றுவளர்புகழுரிமை உவந்து அவருக்கு உதவியுள்ளார். பவபூதியனைய பல பாவாணரும் வடமொழியில் இவ்வாறே வள்ளியரை வழுத்தியுள்ளார். 'உய்வில்லை செய்ந்நன்றிகொன்ற மகற்கு' எனும் அறந்தெரித்தவள்ளுவரோ அந்நன்றிகொன்று, அனவரதம் அளிசெய்த தனவணிகருமதலேசனை மறவியெனும் மறவிக்கும்—தொல்லரும் பாவலர் நல்லறமாபிறந்து தம்மைப் பெரும்பழிக்கும்—பலியாக்கும் பான்மையுடையார்? திருமயிலைப்பெருவணிகன் றரும்உதவி ஒருசிறிதும் பெற்றிருப்பின், வள்ளுவர் அதனைப் பாராட்டி நன்றிக்கடனாற்ற மறக்க மாட்டுவரோ? யாண்டும் எனைத்தளவும் நம்முதற்பாவலராற் சுட்டப் பெறாத ஏலேலசிங்கற்கு அவர் நெடுந்தொடர்புசொல்லும் இக்கதையே அதன் ஒல்லாமைகாட்டற்கு நல்லசான்றாம்

இதுகாறும் எடுத்துக்காட்டியவற்றால், நாயனார் புலைமகளின் பழிமகவல்லரெனவும், கடைச்சங்கக் கடைக்காலத்தவரால் வறியராய் ஏலேலசிங்கரின்வண்மையால் வாழ்ந்தவரல்லரெனவும், மயிலாப்பூரில் வாழ்ந்து மதுரைவந்து சங்கபங்கஞ்செய்துமீண்ட தறுகண்ணரல்லரெனவும், மூன்றாஞ்சங்கத்தின் முற்காலத்தே மதுரைவாசியராய்—மாதானுபங்கியாரின் மணவாளராய்—குறளடிகளால் அறம்பாடி யுலகுய்யவுதவிய வள்ளன்மையுடையாராய்—பண்டைப் பாண்டியருக்கு அருங்கடம்பூண்டு அவருள்படுகருமத்தலைமைவகித்துயர்ந்தபெருந்தகையராய் - அருந்தமிழ் வேளிர்பெருங்குடிப்பிறந்து சிறந்த பெரியருமாவரெனவும், ஒருவாறு தெளியலாகும். தேரா ஊரார் ஓராதுரைக்குங் கதையளவிற் கூறப்படும் புலைக்குலப்பிறப்பும், மயிலாப்பூர்வணிகன்கீழ்த் "தொழுதுண்டுபின் செல்லும்" வாழ்வும், சங்கபங்கத்தருக்கும் தக்கசான்றெதுவுமின்றி, தேவர்க்கிவது உண்மையுணரும் ஒண்மையுடையோர்க்குச் சால்பிறென்பது நடுநிலையாளருக்கு ஒப்பமுடிவதொன்றாம்.

---

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
சென்னை-1

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## சங்கப்பதிப்பு.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் (விசாகப்பெருமாளையர் பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தவை) ... | 0 | 10 | 0 |
| *4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | | | |
| *5. | பன்னூற்றிரட்டு ... ... ... | | | |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| *9. | அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் ... (நச்சினார்க்கினியருரை உரையாசிரியருரையுடன்) | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 5 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| * | சங்கப்புலவராற்றுப்படை உரையுடன் ... ... | | | |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

## செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 3 | 0 |
| 2. | கணநூல் (5) இனியவைநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| *3. | வளையாபதிச்செய்யுட்கள் ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை (திருக்குருகூர் இரத்தின கவிராயர் இயற்றியது.) ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| *7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | | | |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| *9. | அநுமானவிளக்கம் ... ... ... | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... | 0 | 2 | 0 |
| 1 | விவசாயரசாயனசாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| | பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 4. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 22.* | திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23.* | விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25.* | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ... | | | |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... | 0 | 8 | 0 |
| 28.* | சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | 1 | 0 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 35.* | திருமந்திர நூறுபாட்டுக்குறை ... ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37.* | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | | | |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழிமூலமும் பழையவுரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |

## வேறுபதிப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வஞ்சிமாநகர் ... ... ... | 0 | 8 | 0 |
| 2. | ஜோதிமாலை (தமிழ்நாவல்) ... ... | 0 | 4 | 0 |
| 3. | சிவஞானசுவாமிகள்மீது இரட்டைமணிமாலை ... | 0 | 1 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் "செந்தமிழ்" பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின்-கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 26 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப் பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்பு, செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லெக்ஷ்மீநாராயணையா, மானேஜர்.